2012

# சர்வதேச தினங்கள்

## கல்வியியல் சிந்தனையின் புரிதலும் தேவையும்

சுமதி மகேந்திரராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

உடனுதவும்பகுதி

## பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நீங்கள் எடுத்து வாசிக்கும் புத்தகத்தில் கீறுதல் கிறுக்குதல் அழித்தல் வெட்டுதல் மற்றும் ஊறுபாடுகளைச் செய்யவேண்டா மெனக் கேட்டுக்கொள்கின்றோம் புத்தகங்களை எடுக்கும் பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும் இல்லாவிடில் இவ்வூறுபாடுகள் தங்களாலேயே செய்யப்பட்டதென்று கருதப்படுவதுடன் நூலகத்தில் விதிக்கப்படும் தண்டனையையும் ஏற்க நேரிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# சர்வதேச தினங்கள்

## கல்வியியல் சிந்தனையின் புரிதலும் தேவையும்

சுமதி மகேந்திரராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தினங்கள்

## கல்வியியல் சிந்தனையின் புரிதலும் தேவையும்

உடனுதவும் பகுதி

சுமதி மகேந்திரராசா B.Ed.(Eu,srilanka)

232311

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : "சர்வதேச தினங்கள் - கல்வியியல் சிந்தனையின் புரிதலும் தேவையும்"

ஆசிரியர் : சுமதி மகேந்திரராசா

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

மொழி : தமிழ்

முதற்பதிப்பு : ஒக்டோபர் 2012

நூல் வடிவமைப்பு : கஸ்மியா அமீர்

விலை : 250/-

பக்கம் : xv+100

**ISBN : 978-955-54181-2-6**

370.15

**TITLE :** "Sarvathsa thinankal-kalvieyal sinthanaiin purithallum thavayun"

**AUTHER :** Sumathy Mahendrarasa

**COPYRIGHT :** Auther

**LANGUAGE :** Tamil

**FIRST EDITION :** October 2012

**BOOK DESIGNED BY :** Hasmiya Ameer

**PRICE :** 250/-

**PAGES** : xv+100

**ISBN** : 978-955-54181-2-6

Sajju publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# என்னுரை

கற்றல், கற்பித்தல், கருத்துச் சொல்லல் என்பவற்றுக்கான வழி முறைகளும், கருவி நிலைகளும் தொடக்கத்திலிருந்து மாறுபட்டு வருகின்றன.

ஒன்றைத் திரும்பச் சொல்வதாக இருந்தாலும் திருத்திச் சொல்வதாக இருந்தாலும் திருத்தியதைத் திரும்பச் சொல்வதாக இருந்தாலும் புதிய வழிமுறை அல்லது நவீன அணுகு முறைதான் மிகச் சிறந்த உள்ளீடு மற்றும் வெளியீட்டினைத் தரவல்லது என்ற சிந்தனை நிலைபெறத் தொடங்கியிருக்கின்றது.

நாம் எத்தனையோ தினங்களைக் கழித்திருக்கின்றோம். அவை பயனுள்ளதானதா? அல்லது வீணானதா? என்பது குறித்துச் சிந்தித்திருக்கின்றோமா? அது ஒரு புறம் இருக்க, உலகத்தாரின் சிந்தனையைத் தொடுவதற்கென்று பல தினங்கள் சர்வதேச அரங்கில் இருக்கின்றன. அவை குறித்து அறிந்திருக்கின்றோமா? சிந்தித்திருக்கின்றோமா? கொண்டு வரப்பட்ட நோக்கத்தைத்தான் உணர்ந்திருக்கின்றோமா? எனக் கேட்டால், இல்லை என்பது தான் மிகச் சரியான விடையாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசம் ஐக்கியப்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபை வருடத்தின் எல்லா மாதங்களையும் தழுவியதாகக் பல்வேறு தினங்களைச் சர்வதேச தினங்களாகப் பிரகடணப் படுத்தியிருக்கின்றது. உலகில் பல்வேறு சமூகப் பின்னணியில் எழுந்த பொதுத் தாக்கம், மாறுபட்ட நடத்தை மற்றும் புதிய சிந்தனைக்கான தேவை போன்ற அம்சங்களை அடியோற்றியதாக இந்தத் தினங்கள் நினைவூட்டலாகவும் செயற்றிட்ட வரைபு மற்றும் நடைமுறைக்கான தொடக்கமாகவும் இருக்கின்றன.

இவ்வளவு காலமும் இத் தினங்கள் குறித்த பொதுக் கருத்துருவாக்க நிலைகளே இருந்து வந்தன. ஆனால் இத் தினங்கள் குறித்த கல்வியியல் சிந்தனையின் தேவை உணரப்பட்டதோடு இத்தினங்களில் முக்கியமான ஒன்பதினைத் தேர்ந்தெடுத்து அவை தொடர்பான அடிப்படைகள், நடைமுறை வாதப்பிரதி வாதங்கள் மற்றும் மாற்றத்தின் தேவைக்கான சிந்தனைகள் போன்ற சில கருத்துப் பரிமாற்றங்களை இந் நூல் ஆக்கத்தில் பகிர்ந்து கொள்ள முயற்சித்துள்ளேன்.

இந் நூலாக்கம் சர்வதேச தினங்கள் குறித்த கல்வியியல் சிந்தனையின் முழுமையான பார்வையாக இருக்குமென்று நான் கூறினால் அது முழுமையாகாது. உண்மையும் ஆகாது ஆனாலும் இந் நூலாக்கத்தில் உள்ள சிந்தனைத் திரட்டுக்கள் கல்வியியலின் ஆய்வுப் பரப்பெல்லையை விரிவுபடுத்தும் கல்வியியல் சிந்தனையாளர்களின் சிந்தனையின் வீச்செல்லையை மேலும் அதிகரித்தும் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுச் சிந்தனை மற்றும் செயற்றிட்டங்களுக்கு வழி வகுக்கும் என்பதில் ஐயமிருக்காது.

இந் நூலாக்கத்தில் சர்வதேச தினங்களோடு தொடர்புபடும் எழுத்தறிவின் வீரியம், சிறுவர் உரிமை, இளைஞர் மேம்பாடு, ஆசிரியரின் கௌரவம், விதவையரின் மறு வாழ்வு, அகதிகளின் நிலை, விழிப்புலன் அற்றோரின் இயலுமை, தற்கொலையின் அதிகரிப்பு, சமாதானத்தின் தேவை, ஆகிய சர்வதேச சொல்லாடல்களை கல்வியியல் நோக்கில் சிந்தனை உருவாக்கம் செய்திருக்கின்றேன், சிந்தனையூட்டலுக்கான தொடக்கத்தைச் செய்திருக்கிறேன்.

இம் முயற்சிக்குத் துணை நின்றோர் பலர். இவர்களுள் சிலரின் முயற்சியை குறித்துக் காட்டாது போனால் இந்நூலாக்கம் முழுமை பெறாது. இவற்றில் கஸ்மியா அமீரின் புத்தக மற்றும் அட்டைப் பட வடிவமைப்புப் பணி முதலாவதானது. இந் நூலாக்கத்திற்கு அணிந்துரை தந்த வீரகேசரி வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் ஆர். பிரபாகன் அவர்களின் பணியும், ஆய்வுரை எழுதித் தந்த தினகரன் பிரதம ஆசிரியர் எஸ். தில்லைநாதன் அவர்களின் பணியும் முதன்மையானது. இவற்றோடு இந் நூலாக்கத்திற்கு வாழ்த்துச் செய்தி தந்துதவிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவி கலாநிதி (திருமதி) அ.சத்தியசீலனின் பணியும் மேன்மையானது.

இந் நூலாக்கத்திற்கு உதவிய எல்லோரின் பணிக்கும், என் நன்றியும் என் எழுத்துக்களின் கௌரவமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் இருக்கும் என்ற வாக்கு மூலத்துடனும் ஆக்க பூர்வமான கருத்து மற்றும் விமர்சனங்களோடு கல்விச் சமூகம் எனது முயற்சிக்கு இன்னும் ஊக்கமளிக்கும் என்ற நம்பிக்கையோடும் என் உரைக்கு முற்றிடுகின்றேன்.

நன்றி

**சுமதி மகேந்திரராசா,**

தற்காலிக கட்டுரையாசிரியர்,

கல்வி பிள்ளை நலத்துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்.

07.10.2012.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கல்வியின் மூலதனம் சிறந்த அறிவுடமையை உருவாக்குவது. அறிவுடமையின் பங்கென்பது சமூக யதார்த்தங்களைக் காலத்திற்கேற்ப வெளியிடுவதும் அதன் முக்கியத்துவத்தை உணர்வதும், உணர்த்துவதும் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதுமாகும்.

"ஒரு சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துதலும் சமூகத்தை நவீனமயப்படுத்துதலும் கல்வியிலேயே தங்கியுள்ளது. சமூகத்தை நவீனமயப்படுத்தும் அதேவேளை சமூகமரபினையும், பண்பாட்டினையும் காத்து அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்கும் பெரும் பங்கும் கல்விக்கே உரியது".

இப் பின்புலத்தினை உணர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி பிள்ளை நலத்துறையில் தற்காலிக கட்டுரையாசிரியராகக் கடமையாற்றும் செல்வி. சுமதி மகேந்திரராசா தான் எழுதியுள்ள கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்து "சர்வதேசதினங்கள் - கல்வியியல் சிந்தனையின் புரிதலும் தேவையும்" என்ற தலைப்பில் நூலாக்கம் செய்துள்ளார்.

ஆசிரியர் தனது இளம் வயதிலேயே இத்தகைய நூலாக்கத்தை வெளிக் கொணர்வது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விடயம். அவர் நூலில் பின்வரும் தலைப்புக்களின் கீழ் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன:

1) சர்வதேச எழுத்தறிவு எனும் சொல்லாடல்
2) சர்வதேச சிறுவர் உரிமையும் இலங்கைச் சிறுவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) இளைஞர்கள் : மாற்றுயோசனைத் தேவையுடையோர்
4) முன்மாதிரியான ஆசிரியர்கள் கௌரவத்திற்குரியவர்கள்
5) விதவையர்களின் வாழ்க்கை மீட்டுருப் பெறவேண்டும்
6) அகதிகள் : முகாமில் கொண்டாடுவார்களோ?
7) தற்கொலை : தன்விருப்பமா? தண்டனையா?
8) சர்வதேச சமாதானம் தேவையுணர்வா? தேடுபொருளா?
9) விழிப்புலனற்றோர் : வளவாளர்களாக்கப்பட வேண்டும்

இக் கட்டுரைகள் யாவும் காலத்தின் தேவையோடு ஒட்டியனவாக இடம் பெற்றிருப்பது மேலும் பாராட்டுக்குரியதாக உள்ளது.

இவரது கன்னி முயற்சியைக் கல்வியுலகு வரவேற்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

ஆவர் மென்மேலும் பலதரமான நூலாக்கங்களைச் செய்து தான் சார்ந்த கல்விப்புலத்திற்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று மனமார வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி (திருமதி) அ. சத்தியசீலன்**

தலைவர்,

கல்வியியல் துறை,

பட்டப்பின் படிப்புகள் பீடம்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# அணிந்துரை

இன்றைய கால கட்டத்தில் எழுத்துத் துறையில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே பிரகாசிக்கின்றனர்.

பலருக்கு ஆர்வம் இருந்தும், எழுத்துத் துறையில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் அளவுக்கு பொறுமை இருப்பதில்லை. அது மாத்திரமன்றி சந்தர்ப்பமும், ஏற்ற சூழ்நிலையும் கூட அமைவதில்லை.

இவை அனைத்தையும் கடந்து எழுதியே தீரவேண்டும் என்ற மனோதிடமுள்ளவர்களாலேயே புதிய புதிய ஆக்கங்கள் படைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், செல்வி சுமதி மகேந்திரராசா, ஆர்வமுடன் தனது படைப்புகளை நூலுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவரது பணி வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு பெரும் உந்து சக்தியாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

அந்த வகையில், மாணவர்களுக்கும் கல்வித் தேடலை மேற்கொண்டிருக்கும் ஏனையவர்களுக்கும் பெரிதும் துணை நிற்கும் வகையில், கல்வி, பிள்ளை நலத்துறை தற்காலிக கட்டுரையாசிரியர் செல்வி சுமதி மகேந்திரராசாவின் "சர்வதேச தினங்கள் - கல்வியியல் சிந்தனையின் புரிதலும் தேவையும்" எனும் நூல் அமைந்துள்ளது. கற்றல், கற்பித்தல் நிலையிலுள்ளவர்களின் தேடலைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் புனையப்பட்டுள்ள இக்கட்டுரை நூலானது நவீன கல்வி உலகிற்கு வேண்டப்படுவனவற்றை உள்ளடக்கியுள்ளதைக் காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் நூலாசிரியராகவுள்ள இவரது இப்படைப்பாக்க முயற்சியானது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இந் நூலைக் கூர்ந்து நோக்கும் போது நூலாசிரியரின் ஆழமான தேடல் புலப்படுகிறது.

இக்கால மாணவர்களுக்குரிய கட்டுரை, ஆக்கங்கள், கல்வித் தேவைகளுக்கு இந்நூல் பெரிதும் உதவும் என்பது திண்ணம்.

தமது அறிவுத் திறனைப் படைப்பு முயற்சியாக வெளிக்கொண்டுவரும் இத்தகைய படைப்பாளிகளே எமது சமூகத்திற்கு மிகவும் அவசியமானவர்களாவர். அந்த வகையில் நூலாசிரியரின் முயற்சி பெருமைக்குரியதே!

எனவே, தமது திறமைக்கு ஏற்ற வகையில் எழுதி வெளியிட்டுள்ள இந் நூலாசிரியரின் முயற்சியைப் பாராட்டுவதோடு, இது போன்ற அரிய பல ஆக்கங்களை அவர் மேலும் வெளியிட வேண்டுமென கேட்டுக்கொண்டு வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

**ஆர். பிரபாகன்**

பிரதம ஆசிரியர்,

வீரகேசரி வார வெளியீடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுரை

தமது கருத்தைச் சொல்வதும், இன்னொருவரது கருத்தைச் செவியுறுவதும் ஒருவரது திறமையின் கொள்ளளவு சார்ந்த விடயம். இதற்குப் பொறுமை, தொடர்ச்சியான முயற்சி ஆகியவற்றுக்குமிடையே மிக நெருக்கமான உறவு இருக்கின்றது.

நாம் எமது வயதோடு ஒப்பிடும் போது எத்தனையோ நாட்களைக் கடந்து வருகின்றோம். அவை ஒவ்வொன்றும் எத்தனையோ செய்திகளை நம்மிடம் சொல்கின்றன. நம்மில் பெரும்பாலானவர்களுக்கு இந்தச் செய்தியின் தார்ப்பரியம் தெரிவதும் இல்லை புரிவதும் இல்லை.

சர்வதேச சமூகம் சில தினங்களைச் சர்வதேசம்சார் அம்சங்களின் நினைவூட்டலாகக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்துக்குள் வந்திருக்கின்றது. இந்தச் சர்வதேச தினங்கள் சர்வதேச சமூதாய அளவில் நினைவூட்டலுக்கான சிந்தனையாக, அனுஸ்டிப்பாக, திட்டவரைபாக என்று பல தளங்களையும் நிலைகளையும் கொண்டிருக்கின்றது.

சர்வதேச தினங்கள் குறித்த செல்வி சுமதி மகேந்திரராசாவின் ஆக்க முயற்சி காலச் சூழலுக்கு ஏற்றதும் மிகப் பெறுமதியானதாகவும் உள்ளது. சாதாரண தினங்களை மட்டுமல்ல சர்வதேச நினைவூட்டலுக்கான தினங்களையும் சாதாரணமாகவே கடக்கும் நம்மவர் மத்தியில் புதிய சிந்தனையைத் தொடங்கி வைத்திருக்கிறார் நூலாசிரியர்.

“சர்வதேச தினங்கள் - கல்வியியல் சிந்தனையின் புரிதலும் தேவையும்” எனும் நூலாக்க முயற்சியினைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து புதிய வடிவிலான சிந்தனைத் தளத்திற்கான வாய்ப்பினையும் தொடங்கி வைத்திருக்கிறார் நூலாசரியர். கல்வியியல் சமூகத்தின் கவன ஈர்ப்பின் ஓரத்திலிருந்த அம்சங்களையும் முக்கியத்துவம் கொள்ள வேண்டியவை என்று எடுத்துக் காட்டி சிந்தனையாளர்களின் சிந்தனைக்கான வழியை அகலத் திறந்திருக்கிறார் இவர்.

இந் நூலாக்கத்திற்காக தேர்ந்தெடுத்திருக்கும் சர்வதேச தினங்கள் சமுதாய அளவில் பெரிதும் அவதானிக்கப்படக் கூடியதாக இருக்கின்றன. சிறுவர்கள் தினம், இளைஞர்கள் தினம், ஆசிரியர்கள் தினம், விதவைகள் தினம், அகதிகள் தினம் என்று அதன் பட்டியல் இன்னும் தொடர்கின்றது.

இந் நூலாக்கத்திற்காக சர்வதேச தினங்களோடு எடுத்திருக்கும் கருப்பொருளும் காலத்தின் தேவை உணர்ந்தது. இலங்கைச் சூழலில் சிறுவர் உரிமை, இளைஞர்களுக்கான மாற்று யோசனை, விதவைகளுக்கான மறு வாழ்வு, விழிப்புலன் அற்றோருக்கான வலுவூட்டல், முன் மாதிரியான ஆசிரியர் என்று அவற்றில் சிலவற்றைக் குறித்துக் காட்டலாம்.

இந் நூலில் பலரது கவனத்தை ஈர்க்காத விடயங்களைக் கூட முக்கியத்துவம் வாய்ந்ததாக கல்வியியல் நோக்கில் அணுகியிருப்பது இந் நூலின் சிறப்பு எனக் கூறலாம். சர்வதேச எழுத்தறிவு, தற்கொலையின் அதிகரிப்பு, தேடு பொருளான சமாதானம் போன்றவற்றை இவ் வகைக்குள் கொண்டு வரலாம்.

இவற்றுக்கு அப்பால் ஆசிரியரின் சமூக உணர்வும், இன்னொருவர் மீதான அக்கறை உணர்வும் வெளிப்படுவதனைக் காணலாம். ஆசிரியர் சொல்ல வருகின்ற விடயங்களோடு எழுப்பியிருக்கின்ற கேள்விகளும், முன்மொழிந்திருக்கும் தீர்வுகளும், எழுத்துலகக்கிற்கு முன்மாதிரியான சமூக சிந்தனைக்குரிய அடிப்படைகளையும் கல்விச் சமூகத்தாரின் சிந்தனைக்கான நியாயங்களையும் வெளிப்படுத்தியிருப்பதனைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இதுவரை வாசித்த நூல்களைக் காட்டிலும் இந்த நூலாக்கம் புதியதொரு அனுபவத்தைத் தந்திருக்கின்றது. இவரின் முயற்சி காலத்தின் தேவையாயும், எழுத்துலகச் சிந்தனையாளர்களுக்கு பரிசாயும் இருக்கும் என்பது எனது கருத்தின் நிலைப்பாடு.

இது போன்று இன்னும் புதிய எழுத்தாக்க முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன், பாராட்டுகின்றேன்.

**எஸ். தில்லைநாதன்**

பிரதம ஆசிரியர்,

தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலில்...

01. என்னுரை ........................................ v

02. வாழ்த்துச் செய்தி ........................................ ix

03. அணிந்துரை ........................................ xi

04. ஆய்வுரை ........................................ xiii

05. கட்டுரைகள் ........................................ 01

உடனைகள் பகுதி

## கட்டுரைகள்

01 சர்வதேச எழுத்தறிவு எனும் சொல்லாடல் ........................................ 03

02 சர்வதேச சிறுவர் உரிமையும் இலங்கைச் சிறுவர்களும் ........................................ 15

03 இளைஞர்கள் : மாற்று யோசனைத் தேவையுடையோர் ........................................ 27

04 முன்மாதிரியான ஆசிரியர்கள் கௌரவத்திற்குரியவர்கள் ........................................ 37

05 விதவையர்களின் வாழ்க்கை மீட்டுருப் பெறவேண்டும் ........................................ 47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06 அகதிகள் : எந்த முகாமில்
கொண்டாடுவார்களோ? ................................ 57

07 தற்கொலை : தன்விருப்பமா?
தண்டனையா? ................................................ 67

08 சர்வதேச சமாதானம் தேவையுணர்வா?
தேடுபெருளா? ................................................ 79

09 விழிப்புலனற்றோர் : வளவாளர்களாக்கப்பட
வேண்டும் ....................................................... 87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்-08 :

# சர்வதேச எழுத்தறிவு தினம்

01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச எழுத்தறிவு

## எனும் சொல்லாடல்

உடற்றையும் பகுதி

உலகப் போக்கில் அறிவினை அளவீடு செய்வதும் அடையாளம் காண்பதும் அதன் வழியில் பயணிப்பதும் காலத்திற்கக் காலம், பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டு நிற்கின்றது.

அறிவு என்பதற்கான பொதுமை யாக்கலை உலக அளவில் ஒருமுகப்படுத்துவெதன்பது இயலாத காரியம் இது போன்றே அறிவு மூலங்களும் வேறுபட்டு நிற்கின்றன. பிறப்பினால், கட்டாயக் கல்வியினால் சமுகத் தொடர்பினால் இன்னும் பெறுகின்ற அனுபவம் என்று அதன் வகைப்பாடுகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றது இந்த வேறுபட்ட பின்புலத்துக்குள்

எழுத்தறிவின் அவசியம் அல்லது அதன் பங்கு என்பது அளப்பரியது.உலக ஒழுங்கில் பாரிய மாற்றத்தையும், புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமைச் சக்தியையும் இது உருவாக்கி யிருக்கின்றது.

## பொதுவான அறிவென்பது...

வரலாற்று ரீதியில் அவதானிக்கின்ற போது வேறுபட்ட அர்த்தப்பாடுகளையும், கருத்தியல் ரீதியான மாறுபாடுகளையும் தொடர்தேர்ச்சியான ஒருமுனை முன்னேற்றத்தையும் கண்டுவரக் காண இயலும்.

தொடக்கத்தில் அறிவு ஒரு குறுகிய வட்டத்துக்குள் இருப்பதாகவும் அதை அடைவது என்பது பலருக்கு இயலாததாகவும் கருதப்பட்டது. பின்னர் அறிவு தேடிப் பெறக்கூடிய பொருள் வயப்பட்ட ஒன்றாகக் கணிக்கப்பட்டது. தேடிப்பெற்றவர்கள் அறிஞர்களாக, அறிவைச் சுமப்பவர்களாக அடையாளமும் காணப்பட்டனர். ஆனால் காலவோட்டத்தில் எல்லாம் எங்கும் அறிவு மயம் என்ற வாதம் எழத் தொடங்கியது.

அறிவு வயப்பட்டவர்கள், அறிவு மயப்படுத்தப்பட்ட பொருள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் தனது இயலுமையைக் காட்டத் தொடங்கியது.

இவை எல்லாவற்றையும் தாண்டி இன்று அறிவானது உலக, மனித குலத்தின் எல்லா நடைமுறைகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் இயலுமைச் சக்தியை தன்வசம் கொண்டிருக்கின்றது எனும் உண்மையை எழுத்தறிவாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் இவர்களிடையே விமர்சனப் போக்கும், மீள் கட்டுடைப்புச் செய்கின்ற பின்நவீனத்துவப் போக்கும் எழுந்து ஆட்சி செய்யத் தொடங்கியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரியத்தின் தன்மையும் மாற்றங்களும்

மனித குல வரலாற்றில் எழுத்தறிவு ஏற்படுத்திய வீரியப் போக்கையும் அதனால் எழுந்த மாற்றங்களையும் 19ம் நூற்றாண்டில் இருந்து தெளிவாக அவதானிக்க இயலும்.

19ம் நூற்றாண்டுக்கு முன்னர் எழுத்தறிவின் முக்கியத்துவம் அவ்வளவாக அடையாளம் காணப்படவில்லை. ஆனால் அக்காலத்தில் எழுந்த சமூக, அரசியல், பொருளாதார ரீதியான பாரிய மாற்றத்தில் எழுத்திறிவின் வீரியம் மிக அதிகமாக இருந்திருக்கின்றது. ஆன்மிகம் ஆட்சி முறை, பொருளாதார சிந்தனை என்று எல்லாவற்றின் மாற்றங்களின் தொடக்கத்திற்கும் இந்த எழுத்தறிவின் பங்கு முதன்மையானதாக இருந்திருக்கிறது.

18ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து எழுத்தறிவின் வீரியம் மெல்ல மெல்ல உணரப்படலாயிற்று. புதிய சிந்தனை மாற்றத்தின் ஊடாக சமூக மாற்றத்திற்கு வித்திட்டது.

அரசியல் கோட்பாடுகளை வரையறை செய்து புதிய அரசியல் கலாசாரமுள்ள சமுதாயங்களை அங்குமிங்குமாக ஏற்படுத்தியது. தொன்மையான கலாச்சார வழிமுறைக்குள் புதைந்து கிடந்த மடமைகளைக் கேள்விக்குட்படுத்தியது. ஆன்மிக சிந்தனையின் மாறுபட்ட வடிவங்களையும், மாற்று வழியிலான கோட்பாடுகளையும், ஆன்மிகமில்லா வாழ்க்கைக்கான தொடக்கத்தையும் உருவாக்க வழிவகுத்தது. பொருளாதார சிந்தனைகளையும் தொழிற்சாலைக் கட்டமைப்புக்கான உள்ளடக் கங்களையும் ஒருமுகப்படுத்தி வரையறுத்தது, வடிவமைத்தது. சாம்ராச்ஜிய விரிவாக்கத்திற்கும், புதிய ஆட்சி அதிகார எல்லைக்கான கொள்கை வரைபுகளுக்கும் பெரும் துணை செய்தது.

அவ்வாறு எல்லா வகையான மாற்றத்திற்கும் எழுத்து வழி சார்ந்த அறிவினால் பங்களிப்புச் செய்ய முடிந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலை குழைகள், களிமண் தகடுகள், விலங்குகளின் எலும்புகள் போன்றவற்றில் பதிவாகத் தொடங்கிய எழுத்தறிவின் வடிவமானது பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் நிறுவன மயப்பட்ட அறிக்கைகள் என்று தொடர்ந்து இன்று இணையத்தள வடிவத்தையும், இலத்திரனியல் பதிவையும் காட்டும் அளவிற்கு வளர்ந்து அதன் வலுவான வீரியமான தன்மையைக் காட்டுவது மட்டுமல்லாது அதனால் எழுந்த மாற்றங்களையும், விமர்சனப் போக்குகளையும் தன் வடிவத்துக்குள் நின்று கொண்டு மறுவாசிப்புச் செய்கின்ற போக்கையும் கொண்டிருக்கின்றது.

## அவசியமும் அங்கீகாரமும்

எழுத்தறிவின் அவசியம் எல்லாக் கால கட்டங்களிலும் உணரப்பட்டு வந்திருக்கின்றது. தொடக்க காலங்களை விடவும் இன்று இதன் அவசியமும் இதற்கான அங்கீகாரமும் எல்லாச் சமுதாயங்களிலும் முதன்மையானதாக உணரப் படுகின்றது. அதனாலேதான் ஒரு நாட்டின் கல்வி மட்டத்தினை அல்லது அறிவின் இயலுமையினை அளவீடு செய்யும் கருவியாக எழுத்தறிவு மட்டம் கொண்டுவரப்பட்டு சர்வதேச அரங்கில் அதன் முக்கியத்துவம் உணர்த்தி வைக்கப்பட்டிருக்கிறது.

எழுத்தறிவின் அவசியத்தை உணர்ந்ததன் விளைவாகவே எல்லா நாடுகளும் தமது இளம் சமுதாயத்தின் மத்தியில் இதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்கோடு இளவயதிலிருந்து எழுத்தறிவிற்கான, கற்றல், கற்பித்தலுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. பல நாடுகள் இதனைக் கட்டாயப்படுத்தி பாடசாலைக் கல்வி என்ற அடையாளத்துடன் பாடசாலை மற்றும் நிறுவனங்கள் என்று நிறுவன மயப்படுத்தி வைத்திருக்கக் காணலாம். இன்னும் பல நாடுகள் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான சந்தர்ப்பத்தினை இலவசமானதாகவும், பாதியளவில் இலவசமானதாயும் வழங்கி வருகின்றது.

இவற்றுக்கு மேலாக எழுத்தறிவிற்கான தொடக்கத்தைக் கொடுக்கும் முன்பள்ளிகளின் முக்கியத்துவம் இன்று உலகெங்கும் உணரப்பட்டு வருகின்றது. ஆங்காங்கே உருவான முன் பிள்ளைப்பருவக் கல்விக்கான பாடசாலைகளின் எண்ணிக்கை இன்று பெருமளவில் அதிகரித்து வருகின்றன. இன்று முன்பள்ளி அனுபவத்தினைப் பெறாத எந்தப் பிள்ளையும் பாடசாலைகளில் இல்லை எனும் அளவிற்கு அதன் முக்கியத்துவம் ஒவ்வொரு சமுதாயத்திலும் உணரப்படலாயிற்று.

இவைகளை அவதானிக்கும் போது எழுத்தறிவின் அவசியம் மட்டுமல்லாது அதன் தேவையும் எல்லாச் சமுதாயங்களிலும் அதற்கிருக்கின்ற அங்கீகாரமும் தெளிவுபடத் தெரிகின்றது.

இல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

## எல்லை மீறாத எழுத்தறிவே...

எழுத்தறிவின் வளர்ச்சியினால் எழுந்த மாற்றங்களின் பயன்கள் எல்லாக் கட்டங்களிலும் நன்மையானதாக அமைந்திருக்கின்றதா என்றால் அந்த விடைக்குள் பல விமர்சனங்கள் புதைந்திருப்பது தெரிய வரும்.

இது குறித்து ஆராயந்து எழுதுகின்ற எழுத்தாளர்களின் எழுத்துக்களில் ஏராளமான கேள்விகளும், விமர்சனங்களும் எழுப்பப்பட்டு இருக்கின்றன.

சிலர்: எழுத்தறிவின் வீரியம் குறைந்து விட்டது மனித குலத்துக்கான எல்லா வகையான அறிவியல் அணுகு முறைகளையும், அனுபவச் செயன்முறைகளையும் அதனால் கொண்டு வரவோ அல்லது சேர்க்கவோ இயலாது என்றும் சமுதாயத்தின் சிறுபகுதியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற முதலாளிகளின் நலனில் அக்கறையும் பெரும்பகுதியாக இருக்கின்ற தொழிலாளர்களைச் சுரண்டவும் பயன்படுகின்றது என்கின்றனர்.

இன்னும் சிலர்: எழுத்தறிவினால் எழுந்த மாற்றம் பொருளாதார, அறிவியல் ரீதியாக நன்மைகளையும், பண்பாட்டுக் கலாச்சாரம், சமுகக் கட்டுப்பாடு ரீதியாக பாரிய பின்னடைவுக்கான வழிகளையும் ஏற்படுத்தித் தனது எல்லைக்குள் விரிந்து செல்கின்றது. இதனால் எழுத்தறிவினால் உருவாகும் எல்லா மாற்றமும் பயனுறுதியானது என்று கூற இயலாது என்கின்றனர்.

இன்னும் சிலர்: எழுத்தறிவு எல்லை கடந்து தனது இயலுமையைக் காட்டுகின்றது அதற்கு நல்லது – கெட்டது, நியாயம் - அநியாயம், கௌரவம் - கேவலம் இது எதுவும் தெரியாது. அது உணர்வுவயப்பட்ட செய்திகளை அல்லாது நீதிக்கு அப்பாற்பட்டும் அநீதிக்குள் அகப்பட்டும் இயங்கத் தொடங்கி விட்டது. இதனால் மனித குலத்திற்கு மிகப் பெரிய ஆபத்து உருவாகியிருக்கின்றது என்கின்றனர்.

இன்னும் சிலர்: எழுத்தறிவு அறிவின் வழியைத் தொடங்குகின்றது எழுத்தறிவினால் உருவாக்கப்படும் சமுகம் வரலாற்று அனுபவம் குறித்து நிற்பது மட்டுமல்லாது எதிர்காலம் குறித்தும் சிந்திக்கின்றது. சிந்திப்பது மட்டுமல்லாது அதற்கான திட்டங்களையும் வரையக் காரணமாய் அமைகின்றது. எழுத்தறிவானது ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்தினை மட்டுமல்லாது இன்னும் ஒரு சமுதாயத்துடனான போட்டியையும் தொடங்கி விடுகின்றது. சில நேரங்களில் ஒரு சமுதாயத்தின் அழிவிற்கும் அதன் ஊடான இன்னுமொரு சமுதாயத்தின் நலன்களுக்கும் எல்லை கடந்து இயங்கி உதவி செய்கின்றது என்கின்றனர்.

இதிலிருந்து மாறுபட்டு சிலர்: எழுத்தறிவு இயலுமையற்றுக்கிடக்கிறது. இதனால் உருவான எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்களும் முழுமை பெறாதவை, குறைகளைக் கொண்டவை, மிகச் சரியானவை அல்ல, எல்லோருக்கும் நன்மையானவை அல்ல, அவற்றினால் உருவாகும் திட்டங்கள் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமானவை அல்ல, இத் திட்டங்கள் எல்லாம் சில நன்மைகளையும் பெரிய தீமைகளையும் மனித குலத்திற்குக் கொண்டு வந்துள்ளன என்று பின்நவீனத்துவ சிந்தனைப் போக்கைத் தொடங்கியிருக்கிறனர்.

## எழுத்தறிவின் பணி என்ன?

ஒருவருடைய சிந்தனையை அல்லது உறவின் வெளிப்பாட்டை வெளிக்காட்டும் ஊடகத்தை இரண்டாக வகைப்படுத்திப் பார்க்கலாம். ஒன்று பேச்சு வழி, இரண்டாவது எழுத்து வழி பேச்சு வழியிலான தொடர்பாடல் முறைமையை தாய் மடியில் இருந்து கற்றுக் கொள்கிறோம். ஆனால் எழுத்து வடிவிலான தொடர்பாடல் முறைமைக்கு வீட்டுச் சூழல் போதுமானதாக ஆகாது. அதற்கான சிறந்த தளங்களாக பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

எழுத்தறிவானது மாற்றங்களுக்கும் எதிர்காலம் குறித்த திட்டங்களுக்கும் பெரும் துணை புரிகின்றது என்கின்ற அம்சம் ஒரு புறம் இருக்க அதற்குள் பல விமர்சனங்களும் உடனிருக்க அதன் பணி எவ்வாறு இருக்க வேண்டும் என்பது இன்று பரவலாக எழுப்பப்படுகின்ற கேள்வியாக உள்ளது.

இக்கேள்விக்கு விடை தேடும் வழியில் பல்வேறு அம்சங்களை அடையாளம் காண வேண்டியுள்ளது.

எழுத்தறிவினால் உருவாகின்ற இயலுமை சமுதாயத்திலுள்ள எல்லோருக்கும் எழுத்தறிவு கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தினை வீரியப்படுத்தியதற்கான பணியினை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும்.

உலகில் இன்னும் பல பாகங்களில் எழுத்தறிவினை முழுமையாகப் பெற்றுக் கொள்ள இயலாத இளம் தலைமுறையினர் இருக்கின்றனர். வறுமை, யுத்தம் போன்ற காரணங்களால் இளமைக்கால எழுத்தறிவிற்கான வாய்ப்புக்களை இழந்த இளைஞர் கூட்டம் இருக்கின்றது. இவர்களின் எழுத்தறிவிற்கான மீள் உருவாக்கம் குறித்துச் சிந்தித்துச் செயலாற்றும் பணியைச் செய்ய வேண்டி இருக்கிறது.

எழுத்தறிவினால் உருவாகின்ற இயலுமை மனித குலத்தின் வாழ்வாதாரத்துக்கான, இயலுமையற்று இருக்கின்றவர்களுக்கான பலத்த குரலாக ஒலிக்க வேண்டியதாக இருக்கின்றது. சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, அநீதிக்கு உள்ளாக்கப்பட்ட, வேறாக்கப்பட்ட, துரத்தியடிக்கப்பட்ட மக்கள் குறித்துச் சிந்தித்து அவர்களின் வாழ்வாதாரம், எதிர்காலம் மேம்பட திட்டம் அமைக்கும் பணியை விரிவுபடுத்தும் செயன் முறையைத் தீவிரப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

எழுத்தறிவினால் உருவாகின்ற இயலுமை சமுதாய அளவில் வன்முறைக்குட்படுத்தப்படுகின்ற சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள், வலது குறைந்தோர், மாற்றுத் திறனாளிகள் போன்றவர்களுக்கு உதவுகின்ற தளமாக மாற வேண்டும். இவர்களுக்கான உதவிக்கும் போதுமான சமூகப் பாதுகாப்பு, சமூக அந்தஸ்து என்பவற்றுக்குமாக தொடர்ந்து போராடும் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும், அதனை அனுபவிக்கும் சூழலை உருவாக்கும் செயன் முறைக்குத் துணை செய்ய வேண்டியுள்ளது.

எழுத்தறிவினால் உருவாகின்ற இயலமை நீதி, நியாயம், நேர்மை, உரிமை என்பவற்றின் உயர்விற்காக தேவைக்கும் தேடலுக்குமான பூர்த்தியாக வறுமை ஒழிப்பு, வன்முறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிப்பு போன்றவைகளின் உறை விடத்திற்கான அடையாளமாக ஆக வேண்டும். எல்லோருக்கும், எல்லா நிலையிலும் உரிமை மீறாது உதவுகின்ற உணர்வுகளைப் புரிந்து கொள்கின்ற ஊடகமாக இருக்க வேண்டிய தேவையுள்ளது.

எழுத்தறிவினால் உருவாகின்ற இயலுமை ஒருவரின் அல்லது ஒரு சமுதாயத்தின் புகழுக்குரிய அம்சங்களை வென்றெடுக்க வேண்டுமே தவிர ஒருவரின் அல்லது ஒரு சமுதாயத்தின் கௌரவத்தைக் குறைக்கின்ற, தாழ்த்துகின்ற, கேவலப்படுத்துகின்ற செயன் முறைக்கான ஏது வழிகளுக்கு உதவுவதிலிருந்து விடுபட வேண்டி உள்ளது. இன்று எழுத்துக்கு இருக்கின்ற சுதந்திரம் எனும் போக்கில் பக்குவம் இல்லாத எழுத்துக்களும், முழுமையடையாத சிந்தனைகளும், கௌரவக் குலைப்புக்குச் சமனான எழுத்து உருவாக்கங்களும் ஏடுகள் தோறும் எழுத்தறிவாளர்களினால் எழுத்தறிவுச் சமுதாயத்தினை நோக்கி எடுத்து வரக்காணுகின்றோம்.

இத்தருணத்திலிருந்து எழுத்துலகம் இதன் இயல்பு நிலை, சமூகத் தேவை என்பவை குறித்துச் சிந்திக்க வேண்டும்.

48673

232311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

**ஒக்டோபர்-01**

# சர்வதேச சிறுவர் தினம்

**02**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சிறுவர் உரிமையும்

## இலங்கைச் சிறுவர்களும்

சர்வதேசமெங்கும் இருக்கின்ற வேறுபட்ட பண்புகளைக் கொண்டிருக்கும் சமுதாயங்களாக இருந்தாலும் அவை ஒவ்வொன்றும் தமது சமுதாய அலகில் இருக்கும் ஒரு பிரிவினர் குறித்து அதிக அக்கறை கொள்ளத் தொடங்கியிருக்கின்றன.

ஒவ்வொரு நாடுகளும் நாம் கருதி வந்த தமது வளம், பொருளாதார மூலம் அல்லது பொருளாதாரத்தைக் கையகப்படுத்துவதென்பது மாற்றம் கண்டு கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால் தமது சமூகத்திற்குள் இருக்கும் ஒரு பிரிவினர் தமது நிலையான சொத்து என்பதில் இன்று உடன்பாடு கண்டுள்ளன.

இது சமூகத்திலுள்ள எந்தப் பிரிவினராக இருக்கும்? வேறு யாருமின்றி சமுதாய அலகில் மிகப் பெறுமதியான பிரிவினராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் "சிறுவர்கள்" தான் அந்தப் பிரிவினராக இருக்க முடியும்.

## சிறுவர்கள் எனப்படுவோர்...

சிறுவர்கள் என்போர் இவர்களை எவ்வாறு அடையாளம் காண்பது என்பது குறித்து சர்வதேச அளவில் பாரிய கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளன. காலத்துக்குக் காலம், சமுதாயத்துக்குச் சமுதாயம் இந்த முரண்பாட்டின் தன்மையும் முரண்பாட்டுடனான உடன்பாட்டின் உள்ளடக்கமும் மாறுபட்டுக் கொண்டே போகின்றது.

ஆனாலும் சர்வதேசம் ஐக்கியப்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பின் படி "சிறுவர்கள் அல்லது பிள்ளைகள் என்போர் 18 வயதிற்கு உட்பட்டோர் ஆகும். இவர்களின் வயதில் 8, 10, 12, 14, 16, 18 ஆகிய நிலைகளைக் கொண்டு பிரிவினைகள் இருந்த போதிலும் இந்த வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள் ஆகும்" என்று எடுத்துரைக்கக் காணலாம்.

இலங்கையில் இருக்கும் சிறுவர்களுக்கான சட்டக் கோவையும் 18 வயதிற்கு உட்பட்ட எவரையும் சிறுவர்களாகக் கணிக்க இயலும். இவர்களுக்கான உரிமைகள் அனைத்தும் பொதுவாகவே வழங்கப்பட வேண்டும் என்று வரையறுப்புச் செய்து உறுதி செய்வதனையும் காணலாம்.

சர்வதேச மற்றும் தேசிய ரீதியான சிறுவர் தொடர்பான வரையறைகளை ஒன்றாக்கி மிகச் சுருக்கமாக அவதானிப்பதாயின் 08 தொடக்கம் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் சிறார்கள் என்று கணிப்பிடப்படுவதனை பொதுக் கணிப்பீடாகச் சொல்ல இயலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்கள் சமுதாயத்தின் தூண்கள்

சமுதாயத்தில் இருக்கின்ற சமூகப்பிரிவிலே சிறுவர்கள் ஒரு பிரத்தியேகமான அல்லது தனித்துவ இயல்புகளைக் கொண்ட பிரிவினர். ஏனெனில் சமூகத்தில் இருக்கும் மற்றைய எல்லாப் பிரிவினரும் தமது வகிபாகத்தினை மிகச் சரியாக உணர்கின்றவர்கள் ஆனால் சிறுவர்களைத் தவிர. சிறுவர்கள் தங்களின் வகிபாகத்தினை அல்லது முதன்மைத் தன்மையினை ஒரு போதும் உணராதவர்கள். இதனால் இவர்களது வாழ்க்கையையும், எதிர்கால இலக்குகளையும் இவர்களால் இலகுவில் திட்டமிட்டுக் கொள்ள இயலாதுள்ளது.

சிறுவர்களை உருவாக்கும் முழுப் பொறுப்பும் சமுதாயத்திடமே இருக்கின்றது. சமுதாயம் ஒரு தொழிற்சாலையாக இருந்து இந்தப் பணியினைச் செய்ய வேண்டியுள்ளது.

ஒரு சமுதாயத்திலுள்ள அல்லது நாட்டிலுள்ள சிறுவர்களை உருவாக்குவதிலும் வளவாளர்களாக மாற்றுவதிலுமே அந்த நாட்டின் அல்லது சமுதாயத்தின் வெற்றி தங்கியுள்ளது. உதாரணமாக இரண்டாம் உலகப் போருக்குப் பின்ன்னர் ஜப்பான் அழிந்து எந்தப் பொருளாதார வளமும், மூலமும் இல்லாது இருந்தது. இன்று அது உலகில் தலை சிறந்த நாடுகளில் மிகச் சிறந்த பொருளாதார வல்லமை உள்ள நாடாக உள்ளது. காரணம் என்ன? தன்னிடமிருந்த சிறுவர்களை மிகச் சிறந்த வளவாளர்களாக உருவாக்கி மனித வலுவைப் பயனுள்ளதாக்கிக் கொண்டு எல்லாவற்றையும் வெற்றி கண்டது. ஆனால் இந்தியா சிறுவர்களைச் சரியாக உருவாக்கத் தவறியதன் விளைவால் சிறுவர்களே நாட்டின் சுமையாக மாறியிருப்பதைக் காண இயலும்.

ஒவ்வொரு சமுதாயமும் தமது சிறுவர்களை ஏதோ ஒரு வகையில் உருவாக்கம் செய்கின்றது. ஆனால் அந்த உருவாக்கம் சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபேற்றையும் பெறுமான இயலுமையையும் காட்டுகின்றது. பொதுவாகப் பார்த்தால் எல்லாச் சிறுவர்களும் மிகச்சரியாக வளவாளர்களாக உருவாக்கப்படக் கூடியவர்கள் இவர்களின் ஊடாக உயர்ந்த பெறுபேற்றுப் பிரதிபலிப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனாலும் இவர்களின் சமுகச் சூழல், சமுகத்தில் உள்ள வளத்தின் இயலுமை, சமூக அங்கீகாரத்தின் பங்கு என்பனவே சிறுவர்களது உருவாக்கத்திலும் பெறுபேற்று இயலுமையிலும் செல்வாக்கு மற்றும் வேறுபாட்டிற்கான சூழலை உருவாக்குகின்றன.

## சர்வதேசமும் சிறுவர் உரிமையும்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் சர்வதேசத்தின் அதீத கவன ஈர்ப்புக்குரிய விடயமாக சிறுவர்களும் அவர்களது உரிமைகளும் சமுதாயத்திலுள்ள பல தரப்பினர்களால் உணரப்படலாயிற்று. பல சமூக நிறுவனங்கள் சிறுவர்களது சேம நலன் குறித்து மிகத் தீவிரமாகக் கவனம் எடுத்ததன் விளைவாக ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தினை இவ்விடயம் ஈர்த்துக் கொண்டது. சிறுவர்கள் தொடர்பான சொல்லாடல்கள் அவர்களுக்கான உரிமைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து நினைவூட்டுவதற்கும் கருத்துப் பகீர்ந்து கொள்வதற்கும் ஒரு தினம் தேவைப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துடன் ஒக்டோர் முதலாம் திகதி "சர்வதேச சிறுவர் தினம்" ஆகக் கொண்டு வரப்பட்டது.

இவற்றோடு... உலக நாடுகளின் அங்கீகாரத்துடன் சிறுவர்கள் மற்றும் சிறுவர் உரிமை தொடர்பான பிரகடணம் ஒன்றினையும் 1989 இல் நிறைவேற்றியது. இது Convention on the rights of child எனும் பெயருடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



ஒப்பந்தமாகவும் பல நாடுகளில் சிறுவர்கள் தொடர்பான சட்டங்களை வரைவதற்கான சட்டக் கோவையாகவும் இன்று வரை இருந்து வருகின்றது. 1991 இல் இச் சாசனத்தில் இலங்கை பங்காளியானது. இச்சாசனம் 54 பிரமாணங்களின் ஊடாக சிறுவர்களின் வாழும் உரிமை, அபிவிருத்தி உரிமை, பாதுகாப்பு உரிமை, பங்கேற்கும் உரிமை ஆகிய நான்கு அடிப்படையான உரிமைகள் குறித்துப் பேசுகின்றது.

இது மட்டுமல்லாது சிறுவர்களின் சேம நலன், சமூகப் பாதுகாப்பு, கல்வித் திட்டங்களுக்கு உதவும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையினால் "சர்வதேச ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியம்" என்ற அமைப்பு நிறுவப்பட்து. இதன் ஊடாக ஏராளமான சிறுவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலவச : சுவை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

## சிறுவர்களும் இலங்கைச் சூழலும்

1991 இல் ஐ.நாவின் சிறுவர் உரிமைச் சாசனத்தின் பங்காளியாக இலங்கை ஆனதுடன் இலங்கையிலும் சிறுவர்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் தொடர்பான ஏராளமான சட்டங்கள் உருவாக்கப்படலாயிற்று.

1995 இல் கொண்டு வரப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை திருத்தச் சட்டத்திலும் அதனைத் தொடர்ந்து 1998 இல் கொண்டு வரப்பட்ட குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவை திருத்தச் சட்டத்திலும் அதே ஆண்டு கொண்டு வரப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கான சட்டத்திலும் 2005 இல் கொண்டு வரப்பட்ட இல்லத்து வன்முறைகளைத் தவிர்த்தல் வன்முறைச் சட்டத்திலும் 2006 இல் கொண்டு வரப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை திருத்தச் சட்டத்திலும் சிறுவர் உரிமைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பாதுகாப்புக் குறித்து ஏராளமான சட்டங்கள் உள்வாங்கப்பட்டிருக்கக் காணலாம்.

இலங்கையில் அரச சட்டவாக்கம், கண்காணிப்பிற்கு அப்பால் அரசசார்பற்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களும் சிறுவர்களது இயல்பு நிலை, மேம்பாடு, பாதுகாப்பு, முன்னேற்றம் குறித்து அக்கறை காட்டுவதனையும் அதற்குத் தேவையான சமூகச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதனைக் காண இயலும்.

இலங்கைச் சூழலில் இவ்வாறான ஏராளமான சட்ட மற்றும் சமூகப் பாதுகாப்பு சிறுவர்கள் தொடர்பாக இருந்த போதிலும் சிறுவர்களுக்கான போதுமான சமூகப் பாதுகாப்பு அவர்களது உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கான சூழலோ இங்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இன்று நாடு பூராகவும் இடம்பெறுகின்ற சிறுவர் துஸ்பிரயோகங்கள், கடத்தல்களைப் பார்க்கின்ற போது இன்னும் மேம்பட்ட வகையான, நவீன கருத்து நிலைப்பட்ட வகையான சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்புத் தொடர்பிலான சட்டங்களினதும், சமூகப் பாதுகாப்பிற்கான சூழ்நிலைகளினதும் தேவை இன்னும் உணரப்பட வேண்டி உள்ளதனை அறிய முடிகின்றது.

உள்நாட்டு யுத்தம், வறுமை, குடும்பப் பிரச்சினைகள், முறையற்ற உறவுத் தொடர்புகள் போன்ற பல காரணிகளினால் இலங்கையிலும் ஒரு தொகைச் சிறுவர்களே தமக்கே உரித்தான அடிப்படை உரிமைகளையும், சமூகச் சூழலையும் பாதுகாப்பையும் இழந்து நிற்கின்றனர்.

பாடசாலையில் ஆசிரியரின் பாலியல் சேட்டையில் இருந்து தொடங்கி பக்கத்து வீட்டு இளைஞர்களால், வேலை இடத்திலுள்ள முதலாளிகளால், போதைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனையிலுள்ள முதியோர்களால் என்று தொடர்ந்து விபச்சாரத் தரகர்கள், இச்சைத் தொழிலில் ஈடுபடுவோர் வரைக்கும் சிறுவர் உரிமைகள் மற்றும் அவர்களுக்கான பாதுகாப்பு நிலைகளோடு முறையற்ற முறையிலும், நியாயமற்ற நிலையிலும் நடந்து கொள்வதற்கான சூழ்நிலை இன்னும் அதிகரித்துக் கொண்டே போகக் காணலாம்.

சிறுவர்களுக்கு இருக்கும் சமூகப் பாதுகாப்பு மெல்ல மெல்லக் குறைந்து தமது எதிர்காலத்தைச் சூனியமென நினைக்கும் சிறுவர் சமூகம் ஒன்று இன்று உருவாகிக் கொண்டிருப்பதை அறிவியல் உலகம் அறியும்.

உடலுவகலும் பகுதி

## எல்லோரும் பொறுப்பாளிகள்...

சிறுவர் உரிமை மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான அரச சட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான சூழ்நிலைகள் இருந்த போதிலும் அவர்களுக்கு எதிரான வன்முறையும், துன்புறுத்தல்களும், பாலியல் துஸ்பிரயோகங்களும் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. இது தொடர்பில் பல தரப்பட்டவர்களின் கவனம் ஒரு தளத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டி உள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான துஸ்பிரயோகங்களைத் தடுத்து அவர்களின் வாழ்க்கைக்கான உகந்த சூழலை உருவாக்கிக் கொடுப்பது இன்றிருக்கும் எல்லாப் பெற்றோரினதும் கடமையாகும். இவர்கள் பிள்ளைகளில் இளவயதில் கொள்ளும் அக்கறையும், கவனமும் பிள்ளைகளுக்கு ஊட்டுகின்ற கல்வியுமே அவர்களுக்கான பாதுகாப்பையும், எல்லா வகையான உரிமைகளை அனுபவிப்பதற்கான தகு நிலையையும் கொடுக்க இயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றேரின் கண்காணிப்பின் இயலுமையின் வழியாகவே சிறுவர்களுக்கு எதிரான துஸ்பிரயோகங்களைத் தடுத்துக் குறைக்க வேண்டி உள்ளது. இது குறித்துச் சிந்திக்க பெற்றோர் கடமைப்படுகின்றனர்.

பல காரணங்களினால் தமது பெற்றோரை இழந்து நிர்க்கதியாக்கப்பட்டுள்ள சிறுவர்களின் நலன்களில் அவர்களின் குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் அயலவர்கள் அக்கறை கொள்ள வேண்டும்.

இவர்களைத் தமது பிள்ளைகளாகத் தத்தெடுத்து அல்லது தமது பிள்ளைகளைப் போல் அரவணைத்து அவர்களின் எதிர்காலம் சிறக்கவும், அவர்களின் வாழ்க்கை அபிவிருத்தி அடையவும் பணியாற்ற வேண்டியுள்ளது. இது குறித்துச் சிந்திக்க உறவுக்காற நிலமையில் உள்ளோர் கடமைப்படுகின்றனர்.

பாடசாலைக்கும் இதில் பெரும் பங்குள்ளது. சிறுவர்கள் வீட்டைக் கடந்து முதல் வருகின்ற இடம் பாடசாலையாகும். பாடசாலைச் சமூகம் சிறுவர்களின் உரிமைகள், அவர்களுக்கான பாதுகாப்பு, அவர்களுக்கான எதிர்கால இலக்குகள் குறித்து அரவணைப்புடன் சொல்லிக் கொடுக்கின்றது.

அவர்களின் பெற்றோரை அழைத்து இது தொடர்பில் தெளிவூட்ட வேண்டும். அப்போதுதான் ஒரு சுமூகமான சமூகச் சூழல் உருவாக வாய்ப்பு ஏற்படும். இது குறித்துச் சிந்திக்கப் பாடசாலைச் சமூகம் கடமைப்படுகின்றது.

இவற்றுக்கு அப்பால் ஆன்மிக, மத நிறுவனங்கள் இவ்விடயம் குறித்து அக்கறை கொள்ள வேண்டும். ஒழுக்கம், ஆன்மிக வழிவகைகளின் ஊடாக சிறுவர்கள், அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள், அவர்களுக்கு எதிராகச் செயற்படும் சூழ்நிலையில் உள்ளவர்கள் ஆகியோர் மத்தியில் சிறுவர் உரிமை, துஸ்பிரயோகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து ஆன்மிக வழிமுறைகளின் ஊடாக விளக்கமளிக்க வேண்டும்.

சிறுவர் துஸ்பிரயோகம் வன்முறைகளினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து எச்சரிக்க வேண்டும். இது குறித்துச் சிந்திக்க ஆன்மிக நிறுவனங்கள் கடமைப்படுகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக அரச அதிகாரிகளும் இவ்விடயம் குறித்து கூடிய கவனம் எடுக்க வேண்டியுள்ளது.

சட்டங்கள் கோவைகளுக்குள்ளேயே இருந்து விடுவது மாற்றப்பட்டு சிறுவர் உரிமை, பாதுகாப்பு, துஸ்பிரயோகம் தொடர்பான சட்டங்கள் மக்களுக்கு அறியச் செய்யப்பட வேண்டும். இதற்கான தண்டனைகளின் தீவிரத் தன்மை குறித்து மக்களை அறிவூட்ட வேண்டும்.

அப்போதுதான் சமுதாய அளவில் சிறுவர்களின் நிலை மேம்பட, சிறுவர் துஸ்பிரயோகங்கள் குறையக் கடைமையாற்ற முடியும். இது குறித்துச் சிந்திக்க அரச நிறுவனங்கள் கடமைப்படுகின்றன.

இவ்வாறு எல்லாச் சமூக நிறுவனங்களும் ஒரே தளத்தில் ஒன்றுபட்டு இயங்கும் பொழுதுதான் சிறுவர்களுக்கான துஸ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகள் குறைந்து அவர்களது வாழ்வாதாரத்துக்குரிய சூழல் மேம்படவும், அவர்களது உரிமை மற்றும் பாதுகாப்புத் தொடர்பான அம்சங்களில் பூரண பயன் கிடைக்கவும் வழி ஏற்படும்.

உடனுதவும் பகுதி
232311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன்-02

# சர்வதேச இளைஞர் தினம்

03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச இளைஞர் தினம்**

# இளைஞர்கள்:

## மாற்று யோசனைத் தேவையுடையோர்

நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

மனிதனின் வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டு மட்டுமல்லாது, பல சிறப்பியல்புகளைக் கொண்டும் தனித்துவமான சமுதாயமாக அடையாளம் காணப்படுபவர்கள் இளைஞர்கள்

பல வேறுபாடுகளுக்கு அப்பால், வேறுபட்ட பிரதேச, இன, கலாசார எல்லைகளைக் கடந்து அவர்களுக் கென்று தனித்துவமான சமுதாய உறுப்புரிமையும், இயலுமையும் இருக்கின்றது. இதனாலேதான் தேசிய ரீதியில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் இவர்கள் குறித்த கவனம் மேலோங்கியுள்ளது.

வருடா வருடம் ஜீன் 2ம் திகதி சர்வதேச இளைஞர் தினம் நினைவு கூரப்பட்டு இளைஞர் சமுதாயத் திற்கான கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான புதிய சிந்தனைகள் முன் வைக்கப்படுவதனையும் தொடர்ந்து அவதானித்து வருகின்றோம்.

அது கொள்கையோடு நின்று விடுகின்றதா? அல்லது நடைமுறைச் சாத்தியமானதாகிப் பயனளிக்கின்றதா? என்று ஒரு புறம் கேள்விகக் குறியாக இருக்க, இன்றிருக்கும் இளைஞர்களின் நிகழ்காலமும் நாளைய

இளைஞர்களின் எதிர் காலமும் வியப்புக் குறியாக மாறி வருவதனை உணர வேண்டியவர்களாகவும் உள்ளோம்.

## இளைஞர்களின் தொடக்க காலம்

சர்வதேச ரீதியில் அவதானிக்கும் போது பொதுவாக இளைஞர் சமுதாயத்தை நோக்கி ஏராளமான சவால்கள் நிறைந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளன. அது அவர்களின் இயலுமையினை வலுவிழக்கச் செய்வதனைக் காணலாம்.

இன்று இளைஞர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட எல்லா வகையான ஆய்வுகளின் முடிவுகளும் சர்வதேச அறிவுக்கு ஒரு அடிப்படையான விடயத்தை உணர்த்தியிருக்கின்றது. அதுதான் இன்றிருக்கும் இளைஞர்களின் தொடக்க காலம் முறையாக செப்பனிடப்படவில்லை என்பது.

ஏதோ ஒரு காரணத்தினால் ஒரு இளைஞன் குழந்தைப் பருவத்தில் உடல், உள, கல்வி ரீதியாக முழுமையான இயலுமையை, சமூகப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதில்லை. அதனால் தனது இளைஞர் காலத்தில் தன் இயலுமைக் குறைப்பில் அது பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றது. இவ்வகையான சூழலைப் பல காரணிகள் தோற்றுவிக்க ஏதுவானதாக இருக்கக் காணலாம். தாய், தந்தையின் மரணம், விவாகரத்து, குடும்பப் பிரச்சினை, குடும்ப இடப் பெயர்வுகள் என அதன் வரிசை தொடர்ந்து கொண்டே செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றலுக்கான ஆர்வமும், வாய்ப்புக்களும்

கற்றலுக்கான வாய்ப்புக்கள் இன்று அதிகரித்துத்தான் உள்ளது. நல்ல விடயமாக இருந்தாலும், கெட்ட விடயமாக இருந்தாலும் அறிவினைப் பெற்றுக் கொள்ளும் வாயில்கள் அகலத் திறந்து கிடக்கின்றன. ஆனால் அது எல்லா இளைஞர்களுக்கும் கிடைப்பதாக இல்லை. அதேவேளை எல்லா இளைஞர்களுக்கும் எல்லாக் கல்விக்கான வாய்ப்புக்களும் கிடைப்பதாக இல்லை. இதனால் அவர்கள் தமது கற்றலுக்கான தளத்தைத் தெரிவு செய்து கொள்வதில் தோற்று விடுகின்றனர்.

இதே போல் எல்லாக் கற்றலுக்கான வாய்ப்புக்களும் இருந்த போதும் அதனைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இளைஞர்களுக்கிடையே குறைந்து கொண்டு போவதனைக் காணலாம். உதாரணமாக நவீன கணணி வலையமைப்பில் எத்தனையோ அம்சங்கள் இருக்க நாள் முழுவதும் நண்பர்களைத் தேடும் இணையத் தளங்களில் மட்டும் இளைஞர்கள் இணைந்திருக்கின்றனர்.

48673

## குற்றச் செயலும் இலகு வழிகளும்

இளைஞர்கள் எப்போதும் இலகு வழிகளுக்குள் ஈர்க்கப்படுகின்றவர்கள், இலகு வழிகளை எடுத்து வருபவர்கள். நன்மைக்குரிய வழியாக இருந்தாலும், குற்றச் செயலுக்கான வழியாக இருந்தாலும் அதனை ஆராய்ந்து உணர்ந்து அவ்வழியில் பயணிக்கும் பக்குவம் அற்றவர்களாக மாறி வருகின்றார்கள். முன்பிருந்த கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்து விட்டு, நவீன உலகை நோக்கிய இவர்களது பயணத்தில் குற்றச் செயல்களுக்கான வழிகளும், அவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணமே உள்ளன. அதனைக் குறைப்பதிலும் பார்க்க அதற்கான ஆர்வத்தினை அதிகரிக்கும் வகையில், நவீன தகவல் பரிமாற்ற ஊடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையமைப்புக்களும், நவீன தொடர்பு சாதனங்களும் இயங்குவதனையும் எண்ணிக்கையில் அதிகரித்து நல்லதைச் சொல்லும் இயலுமையில் குறைவைக் கொண்டிருப்பதாயும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அதேவேளை எல்லாக் குற்றச் செயல்களுக்கும் அவை வடிவத்தைக் கொடுக்கின்றன. அவை பாலியல் துஸ்பிரயோகம், போதைவஸ்துப் பாவனை, சிறுவர் துஸ்பிரயோகம், களவு, கொலை, வீண் சண்டை சச்சரவுகள் என அவற்றைப் பாகப்படுத்தி விட்டு அவற்றை இளைஞர் சமுதாயம் தொடர்ந்து செய்து வருவதனையும் சுட்டிக் காட்டுகின்றது.

இதனிடையே குற்றச் செயல்களைக் குறைக்க விழிப்புணர்வு ரீதியாக இயங்கும் ஊடக வலையமைப்புக்களும் இல்லாமலில்லை.

## ஆன்மிகமும் அதன் இயலுமையும்

நவீன அறிவுலகம் ஆன்மிகம் தோற்று அல்லது பொய்யாக்கப்பட்டு நவீன தொழிநுட்ப வாதம் உலகில் நிலைத்திருக்கின்றது. அல்லது ஆட்சி செய்கின்றது என்று நம்புகின்றது.

உண்மையில் ஆன்மிக ஈடுபாடும், அவைகள் கொண்டு வரும் கட்டுப்பாட்டு முறைகளும் மாற்றம் கண்டுள்ளன. ஆன்மிக வழிகளில் செலவிடும் நேரங்களை அறிவியலும், ஊடக வலையமைப்புக்களும் ஈர்த்துக் கொண்டுள்ளன. அதனால் ஆன்மிகத் தளங்களும், கொள்கைகளும் போதித்த நல்ல விடயங்கள் கூட இன்றிருக்கும் இளைஞர்களின் உள்ளங்களைச் சென்றடைந்ததாகத் தெரியவில்லை. ஆன்மிகம் ஒரு புறம் வன்முறைக்கான வாயில்களை உருவாக்கினாலும், மறு புறம் மனித இனத்தின் அமைதிக்காக, உள்ளத்தின் சாந்திக்காக,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க விழுமியங்களுக்கான ஆதாரங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் இது இளைஞர்களின் காதுகளை எட்டுவதற்கு இன்று பல்வேறு தடைகள் போடப்பட்டு விட்டன.

இளைஞர்களின் உள்ளத்திலிருந்து ஆன்மிக உணர்வுகள் இல்லாது போகின்ற போது, அல்லது உணர்வுகளை அது சென்றடையாத போது அவர்கள் கெட்ட செயல்களையும், மனச்சாட்சிக்கு விரோதமான செயல்களையும் செய்யத் தொடங்குகின்றார்கள் அவர்களின் உள்ளத்தை நல்ல காரியங்களால் நிரப்பீடு செய்ய நவீன அறிவுலகினால் இயலவில்லை.

மேற் குறித்துக் காட்டியது போன்று இளைஞர்களின் இயலுமை, தற்போதைய சூழ்நிலைகள் தொடர்பான அம்சங்களின் தொகுப்பு இன்னும் ஏராளம் இருக்கின்றன. தொகுத்து எழுதினால் நீண்டு கொண்டே போகும்.

ஒரு புறத்தில் இளைஞர் சமுதாயத்தினைச் சூழ்ந்துள்ள சிக்கலான சூழ்நிலை குறித்துப் பேசப்பட மறுபுறம், இச் சூழ்நிலைகளை மாற்றியமைத்து புதிய உருவாக்கங்களைத் தேடுவதற்கான மாற்று யோசனைகள் குறித்தும் ஆராய வேண்டிள்ளது.

## இவ்வருட இளைஞர் தினம்...

உலகம் முழுவதிலும் இருக்கின்ற இளைஞர்களை நோக்காகக் கொண்டு வருடா வருடம் சர்வதேச இளைஞர் தினம் புதிய கொள்கைகளை அல்லது விதப்புரைகளை முன்வைக்கின்றது. அவர்களின் வாழ்வியல் தொடர்பாக ஆராயும் எண்ணத்தினை அறிவியல் உலகிற்கும், அறிவுலக சமூகத்திற்கும் ஞாபகமூட்டுகின்றது. அத்தோடு இளைஞர் சமுதாயத்தின் எதிர்காலம் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிப்பிராயங்களையும் அவற்றிற்கான சொல்லாடல்களையும் உருவாக்குகின்றது.

இவ்வாறான முயற்சிகள் சில வேளை தொடக்கத்திலேயே நின்று விடும் அல்லது அன்றைய தினத்துடனேயே மறைந்து போகும் வண்ணம் அதன் முக்கியத்துவம் குறைந்திருக்கும், இன்னும் சில கொள்கைகளாக நிற்கும், நடைமுறைச் சாத்தியம் அற்றிருக்கும், ஏராளமான சிந்தனைகள் மேற்குலகை மையப்படுத்தி இருக்கும், கிழக்குலகம், கிராமப் புறங்கள் குறித்த பார்வை இருக்காது. அதனால் அவை ஒருபக்கக் கேள்வியையும் பெறுபேறாகக் காட்டும்.

ஆனால் இவ் வருடம் ஞாபகமூட்ட இருக்கும் சர்வதேச இளைஞர் தினம் இளைஞர்களின் வாழ்வியல் குறித்து எவைகளை அடையாளம் கண்டிருக்கின்றது? அவர்களின் எதிர் காலம் குறித்து எவைகளை முன்மொழியப் போகிறது? எனப் பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது. ஏனெனில் இளைஞர்கள் தொடர்பாக எழுந்திருக்கும் சிக்கலான சூழ் நிலைகளின் எண்ணிக்கையும், அதன் வலுவும் உலகம் முழுவதும் அதிகரித்ததாக உள்ளது.

ஏனெனில் எல்லா நாடுகளிலும் பொருளாதார மாற்றமும், வீழ்ச்சியும் கண்டு வேலையில்லாப் பிரச்சினை மேலொங்கி இருக்கும் சூழ்நிலையில், நாடுகள் பிரிவினைக்காகவும், சுதந்திர தாகத்திற்காகவும் உருவான தீவிரவாத எண்ணங்கள் வெற்றி அல்லது தோல்வி என்ற கட்டத்துக்குள் முடிவு காணப்பட்டிருக்கும் சூழ்நிலையில், தேசிய அரசுகளுக்கு எதிரான இளைஞர்களின் கிழர்ச்சிகள் தேசிய எழுச்சியாக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் இளைஞர்களினால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் சூழ்நிலையில், எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்மீகம் பொய்யாக்கப்பட்டு தொழில் நுட்பம் மெய்யானது என்று எண்ணும் சூழ் நிலையில் இவ்வருட சர்வதேச இளைஞர் தினம் ஞாபகப்படுத்தப்பட உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்று யோசனை என்ன?

உடனுதவும் பகுதி

மாறுபட்ட சூழ்நிலையில் ஞாபகப்படுத்தப்பட இருக்கும் சர்வதேச இளைஞர் தினம் என்ன முன்யோசனைகளைக் கொண்டு வரப்போகின்றது? இளைஞர் சமதாயத்தின் வாழ்வியலை எவ்வாறு மாற்று வழியின் ஊடாகச் சரியாக செப்பனிடப் போகின்றது என்பது வெறும் கேள்வியாக மட்டுமல்லாது பெரும் எதிபார்ப்பாகவும் உள்ளது.

இளைஞர்களின் எதிர்கால வாழ்வியலுக்காய் கல்வி ரீதியான மாற்றத்தினை முன்மொழியப் போகின்றதா? பொருளாதார மாற்றத்திற்கு ஊடான வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கான அடிப்படை அம்சங்களை முன்மொழியப் போகின்றதா? குற்றச் செயலுக்கான வாய்ப்புக்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் அதற்கான தண்டனைகளை வலுப்படுத்துவது குறித்து உருவாக்க வேண்டிய சட்டங்களுக்கான அடிப்படைகளை முன்மொழியப் போகின்றதா? வறுமை ஒழிப்புத் திட்டங்களை வலுப்படுத்தி அதன் ஊடாக இளைஞர்கள் மறு வாழ்வுக்கான உலகப் பொது விதியினை முன்மொழியப் போகின்றதா? அல்லது வழமை போல் பொதுவான ஒரு சுலோகத்தோடு வெறும் ஞாபகமூட்டலாக மட்டும் இருக்கப் போகின்றதா?

எது எவ்வாறிருந்த போதும் முன்யோசனைகள் இரட்டைத் தன்மை கொண்டவைகளாக இருக்கும் போதே அது சாத்தியமானதாக இருக்கும். அதாவது இன்றிருக்கும் இளைஞர் சமுதாயத்துக்கான சீரமைப்பு அல்லது மறு வாழ்க்கைக்கான மாற்று வழி உருவாக்கம் என்கின்ற விடயத்தையும், நாளைய இளைஞர்களுக்கான அடிப்படை இயலுமைகளை இன்றிருந்தே கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் என்பதனையும் இணைத்ததாக உருவாக்கப்படும் போதுதான் இன்னுமொரு தசாப்தத்திற்கு பிறகேதும் இளைஞர்களின் வாழ்வு இன்னலுள்ளதாக அல்லது வறுமை தேய்ந்ததாக அல்லது கேள்விக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியாக அல்லது விரயமானதாக வீட்டுக்கும் நாட்டுக்கும் சேவை செய்யக் கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஒக்டோபர்-06 :

# சர்வதேச ஆசிரியர் தினம்

04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச ஆசிரியர் தினம்

# முன்மாதிரியான ஆசிரியர்கள்

## கௌரவத்திற்குரியவர்கள்

கற்றல், கற்பித்தல் என்று வந்தாலே முதலில் பார்க்கப்படும் சொல் ஆசிரியம் முதலில் அவதானிக்கப்படும் மனிதர் ஆசிரியர். முதலில் அர்ப்பணிப்புள்ளதாய் கணிக்கப்படும் சேவை ஆசிரிய சேவை.

நவீன அறிவியல் ஆன்மிகக் கருத்து மாறுதல் களுக்குள்ளும் தொடர்ந்தும் ஆசிரியர்களின் வகிபாகமே முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் இந்த முதன்மைத் தன்மை பலத்த விமர்சனங்களோடு கேள்விக்குள்ளாக்கப்படத் தொடங்கலாயிற்று; இந்த வகிபாகத்தின் முதன்மைத் தன்மையில் விமர்சனங்களுடனான தகுதி இழப்பும், குறைப்பும் இடம் பெறலாயிற்று ஒரு சில ஆசிரியர்கள் தோற்றுவிக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசப்பான அனுபவங்களும் நவீன கல்விச் சீர்திருத்தங்களும் இந்த முதன்மையை இழப்புச் செய்வதற்கு தூண்டுதலாக்கத் தொடங்கியிருக்கின்றது.

## ஆசிரியர்களின் வகிபாகம்

தொடக்க கால வரலாற்றுடன் அவதானித்துப் பார்த்தால் காலத்துக்குக் காலம் ஆசிரியர்களின் வகிபாகத்தின் தன்மை அல்லது அவர்களுக்கு இருந்த முதன்மைத் தன்மை மற்றும் கௌரவம் என்பன வேறுபட்ட அணுகுதல்களுக்கு ஊடாகவும், மாற்று அனுபவங்களுக்கு ஊடாகவும் பார்க்கப்பட்டு வந்திருப்பதனை அவதானிக்கலாம்.

தொடக்கத்திலிருந்த நூறு வீத ஆசிரியர் மைய (குருகுல) கல்வி முறை மெல்ல மெல்ல மாற்றம் கண்டு பின்னர் பாடத்திட்ட மையக் கல்விக்கு வழிவகுத்தது. பிள்ளைகளின் சூழ்நிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்கும் நிலமை உருவானது. இதிலும் மாற்றம் கண்டு இன்று பிள்ளை மையக் கல்வி முதன்மை பெறுவதனைப் பார்க்கின்றோம். குறித்த ஒரு வகைப்பாடத்திட்டத்தின் வரையறைக்குள் பிள்ளைகளின் அறிவு மட்டத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உலகம் இன்று பழக்கப் பட்டிருப்பதனைக் கல்வியியல் ஆய்வாளர்கள் அறிவர்.

இவ்வாறான சூழலுக்குள் ஆசிரியரின் வகிபாகம் மாற்றப்பட்டாலும் அவர்களுக்கு கற்றல், கற்பித்தல் செயன் முறையில் இருக்கும் முதன்மைத் தன்மை என்பது அளவிட முடியாதது. கணிப்பிட்டுச் சொல்ல இயலாதது மாற்று யோசனைகளின் ஊடாக பூர்த்தி செய்ய இடம் இல்லாதது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் எப்போதுமே சேற்று நிலம் அல்லது தொழிற்சாலை போன்றவர்கள். அவர்களின் கட்டமைப்பு மற்றும் கொள்ளளவு அல்லது உள்ளீட்டின் இயலுமை என்பது நவீன மயப்படுத்தலுக்கு உள்ளாக வேண்டியது. நவீன வழிவகைகளின் ஊடாக உச்ச பயனுக்கான சூழ்நிலைகளைத் தேடி நிற்பது.

ஆசிரியர்கள் தொழிற்சாலையாக அல்லது சேற்று நிலமாகத் தமக்கு கொண்டு சேர்க்கப்படும் எல்லா மாணவச் செல்வங்களையும் மிகச் சக்திமிக்க, வளமுள்ள, அவசியமான, காலச் சூழலுக்குத் தேவையான, நல்ல பண்புகளைக் கொண்ட, அடுத்தவருக்கும், சமூகத்திற்கும் பயனுள்ள ஒருவராக மாற்றும் சக்தி கொண்டவர்களாக உள்ளனர்.

இவர்களின் நேரிய வழிகாட்டலிலும், உயர்ந்த குறிக்கோளுடனான போதனையிலுமே சிறந்த மாணவர் சமூகத்தை உருவாக்க இயலும். இதன் ஊடாக நாளைய சமூகத் தலைவர்களை உருவாக்கும், பயிற்றுவிக்கும் மிகப்பெரிய பொறுப்பை ஆசிரியர் சமுதாயம் செய்து கொண்டிருக்கின்றது.

இன்றிருக்கும் கற்றல், கற்பித்தல் சூழலில் ஆசிரியர்கள் வெறும் புத்தகம் போன்று ஜடப் பொருளாக இருக்க இயலாதுள்ளது. ஆசிரியர்கள் முதலில் நல்ல முன்மாதிரியான ஒருவராக ஒழுக்க விழுமியங்களைப் பேணுகின்ற ஒருவராக இருக்க வேண்டியுள்ளது. மாணவர்களின் மீது அன்பும், அக்கறையும் செய்யும் பெற்றோர் நிலைப்பட்ட ஒருவராக இருக்க வேண்டியுள்ளது.

இதுமட்டுமன்றி மாணவர்களின் வழிகாட்டியாக, அறிவுலகின் ஏற்ற இறக்கங்களைச் சமநிலையில் நின்று சொல்லிக் கொடுக்கும் நீதிபதியாக, புதிய அம்சங்களை வரலாற்றுப் பாரம்பரியத்தோடு தொடர்பு படுத்தி வழங்கும் பாரம்பரியத்தின் காவலனாக, உண்மையான நவீன மற்றும் புதிய அம்சங்களைத் தேடிக் கொண்டு வரும் மாற்றத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவராக, மாணவர்களின் இயலுமை உணர்ந்து அவர்களைச் சரியாகச் செதுக்கும் சிற்பியாக, உலக மற்றும் அரச காரியங்களின் நடைமுறைகளை சொல்லிக் கொடுக்கும் அதிகாரியாக, சமூகத்தோடு பாடசாலையையும் இணைத்து இயக்க, இயங்கக் கற்றுக் கொடுக்கும் நிர்வாகியாக, இலக்கியச் சுவை தரும் ஓவியனாக, கவிஞனாக, கலைஞனாக, கதையாசிரியனாக இன்று ஆசிரியர்களின் வகிபாகம் என்பதும், அவற்றின் சூழ்நிலைகள் என்பதும் வெவ்வேறான ஏற்ற இறக்கங்களையும், மிகப்பெரிய பொறுப்பையும் கொண்டதாகக் காண்படுகின்றது.

## ஆசிரியர்களும் கசப்பான அனுபவங்களும்

“உலகில் சாதனைகளை, முன்னேற்றங்களை, புதிய நடைமுறைகளை உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள்” எனும் கருத்துருவாக்கம் எப்போதும் ஏற்புடையது. இவர்களின் பணியும், சேவையும் இவை இரண்டிற்கும் அப்பாலான முயற்சிகள் அனைத்தும் பெறுமதியானது, மிக உயர்ந்தது. இவர்கள் வாழ்வின் எல்லாப் பகுதியிலும் எல்லாக் காலத்திலும் கௌரவத் திற்குரியவர்கள். இவர்களின் நலனிலும் வாழ்வாதாரத் தேவையிலும் மாணவ சமூகம் அக்கறையும் உதவியும் செய்யக் கடமைப்பட்டவர்கள்.

தமது மாணவர்களின் முன்னேற்றத்திலும், உயர்ச்சியிலும் மகிழ்ச்சி கொள்கின்றவர்கள் ஆசிரியர்கள். பெற்றோர் என்றாலும் தனது பிள்ளை உயர் நிலையை அடைந்த பின்னர் தங்களைக் கவனிக்க வேண்டும் என்று ஆசை கொள்வர். குடும்பத்தவர்களோ தனது குடும்பத்தவரின் உயர்வில் கௌரவம் இருப்பதாக உணர்வர். நண்பர்களில் பெரும்பாலானோர் பாதிச் சந்தோசமும் மீதி பொறாமையும் கொள்வர். ஆனால் உயர்ந்த உள்ளம் கொண்ட ஆசிரியர் குழாம் மட்டுமே எந்த எதிர்பார்ப்பும் இன்றி ஒரு மாணவனின் உயர்ச்சியில் மகிழ்ச்சி மட்டும் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு கோப்பைப் பாலுக்குள் ஒரு சொட்டு விசம்" கலப்பது போன்று ஒரு சில ஆசிரியர்களினால் ஆசிரியர் சமூகத்திற்கும், பொதுச் சமூகத்திற்கும் சில கசப்பான அனுபவங்களும் கிடைப்பதுண்டு. மிக அருவருக்கத்தக்க நடத்தைகளை வெளிக்காட்டும் ஆசிரியர்களும் உண்டு.

தனது மாணவர்களுடன் பாலியல் சேட்டை செய்தல் என்று தொடங்கி... தன்னை மிஞ்சி நடந்து விடக் கூடாது என்பதற்காக கிடைக்கின்ற வாய்ப்புக்களைத் தடுக்கின்ற செயல் வரைக்கும் இந்தத் துர்நடத்தையின் வீச்செல்லை விரிந்து கொண்டே செல்லக் காண இயலும்.

இவ்வாறான பிரதிபலிப்புக்களை ஒரு சில ஆசிரியர்கள் காட்டினாலும் ஒட்டு மொத்த ஆசிரியர் சமுதாயம் என்று பார்க்கின்ற பொழுது ஆசிரியர்களுக்கான கௌரவத்தையோ அல்லது நன்றி செலுத்தல்களையோ கொடுப்பதற்கு எவரும் மறுத்து விடவோ, மறந்து விடவோ இயலாது. அவர்களைக் கௌரவிப்பதிலும், அவர்களின் நலனிலும் வாழ்க்கை முன்னேற்றத்திலும் அக்கறை கொள்வதும் அவர்களிடம் கல்வி கற்ற மாணவர்களின் பொறுப்பு மட்டும் ஆகாது. கல்விச் சமூகம் மற்றும் பொதுச் சமூகத்தின் பொறுப்பாகவும் இதனை அடையாளம் காணவேண்டியுள்ளது.

உடைறுதவும் பகுதி

## ஆசிரியர்களும் நவீன சிந்தனைகளும்

நவீனத்துவ ரீதியில் உலகில் பொருட்கள் மற்றும் கருவிகள் மட்டுமல்லாது நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், எண்ணங்கள், சிந்திக்கும் விதம் என்று எல்லாம் மாற்றம் கண்டு விட்டன.

இந்த மாற்றத்தின் பின்புலத்திற்குள் நின்று கொண்டு கல்விச் சமூகத்தை ஆராய்கின்ற கல்வியியலாளர்கள் கல்விச் சமூகத்திற்குள் இருக்கும் மூன்று அம்சங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன சவால்களாக அல்லது கல்விசார் நோயாக அடையாளம் காணுகின்றனர்.

ஒன்று, ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் நவீன முறையிலான கற்றலுக்கான கருவி மற்றும் நடைமுறைகளை அறிந்து கொள்ளத் தவறி விடுகின்றனர். மாணவர்களது உளவியல் அம்சங்களை உணர்ந்து கற்பிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள ஆர்வமற்றிருக்கின்றனர். இதன் ஊடாக நவீன கற்றல், கற்பித்தலுக்கான சூழ்நிலைகளையும் மாணவர்களுக்கு மிகச் சரியான கற்றலுக்கான அறிவு நிலைகளையும், அனுபவங்களையும் பெற்றுக் கொடுப்பதில் ஆசிரியர் சமூகம் சவாலை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இரண்டாவது, மாணவர்கள் பொருள் மயப்பட்ட நவீன கல்வி முறைகளுக்குள் ஆசிரியர்களை மதிப்பதையும், கௌவரப்படுத்துவதையும் மறந்து விடுகின்றனர்.

ஆசிரியர்களின் தேவை மற்றும் முயற்சிக்குப் பின்னாலுள்ள கஸ்டங்களையும் மாணவர்களின் கௌரவத்தினால் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் மனத்திருப்தியையும் மாணவர் சமூகம் எண்ணிப் பார்க்கத் தவறி விடுகின்றது. இதன் ஊடாக மாணவர்கள் மீதான ஆசிரியர்களின் கடமை மற்றும் தொழிலுக்கு அப்பாலான அக்கறை அல்லது கண்காணிப்பு எனபது இல்லாமல் போகின்றது. இதனால் ஒழுக்கப் பண்பு நிறைந்த மாணவர் சமூகத்தைக் கட்டியெழுப்புவது சவால் நிறைந்ததாக உள்ளது.

மூன்றாவது, கற்றலுக்கான வளங்களும், ஆலோசனைகளும் முறையாகவும், உரிய நேரத்திலும் பகிரப்படாது போகும் நிலை உருவாகியுள்ளது.

நாடுகளின் பொருளாதார நிலை, நவீன கற்றலுக்கான கருவிகளின் பயன்பாடு, பகிர்ந்தளிக்க இயலாதுள்ள காலச் சூழ்நிலை போன்றன இச் சூழலை உருவாக்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சமுதாயத்திலுள்ள எல்லா மாணவர்களுக்கும் வளங்கள், வாய்ப்புக்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவது பொதுச் சமூகத்திற்கு முன்னால் சவால் நிறைந்ததாக உள்ளது.

இவ்வாறான நவீன சவால்களை கல்விச் சமூகமும், ஆசிரிய குழாமும், மாணவச் செல்வங்களும் வெற்றி கொள்வார்களாக இருந்தால் அவர்களின் கௌரவம், சேவை மற்றும் முன்னேற்றம் என்பன மேம்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுன்-23 :

# சர்வதேச விதவைகள் தினம்

05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச விதவைகள் தினம்

# விதவையர்களின் வாழ்க்கை

## மீட்டுருப் பெறவேண்டும்

உலகின் எந்தவொரு சமுதாயத்தினை உற்று நோக்கினாலும், அச் சமுதாயத்தில் விதவைகள் என்கின்ற சமூகப் பிரிவொன்று இருந்து கொண்டேதான் இருக்கின்றது. அவர்களின் வாழ்க்கை முறை சாதாரண பெண்களின் வாழ்க்கை முறையிலிருந்து வேறுபட்டிருக்கின்றது.

சமுதாய அளவில் விதவைகள் கொண்டிருக்கும் வகிபாகத்தின் தன்மை சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபட்டு நின்றாலும், அவர்கள் குறித்த சமுதாயத்தின் பார்வை இன்னும் கீழ் மட்டத்திலேதான் இருக்கின்றது. சமுதாய இருப்பில் மட்டுமல்லாமல் குடும்ப வாழ்க்கை, குழந்தை வளர்ப்பு என்று எல்லாப் பாகத்திலும் அவர்களின் உணர்வுகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப் பூர்த்திக்கான எதிர்பார்ப்பு போன்றன எதிர்பார்ப்புகளோடு தொடங்கி எதிர்பார்ப்பையே முடிவாகவும் கொண்டிருக்கக் காண இயலும்.

## யார் விதவைகள்..?

விதவைகள் என்றால் யார் என்ற வினாவிற்கு அவ்வளவு இலகுவில் உலக அளவில் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் விடை கொடுக்க இயலாது. ஆனால் விதவைகள் தானாக உருவாகின்றார்களா? அல்லது உருவாக்கப்படுகின்றார்களா? என்பதற்குப் பொதுவான எல்லோரும் அங்கிகரிக்கும் பொதுமைப்படுத்தல் இருக்கின்றது. ஏனெனில் விதவைகள் குறித்த சிந்தனையும் அவர்களை அடையாளம் காட்டும் சொல்லாடல்களும் காலத்துக்குக் காலம் மாற்றம் கண்டு வருகின்றன.

உலக அளவில் சமுதாயத்துக்குச் சமுதாயம் விதவைகள் குறித்த சிந்தனை மாறுபட்டு நிற்கின்றது. மேற்குலகம், கிழக்குலகம் விதவைகள் குறித்த சிந்தனைத் தளத்தை வேறுபட்ட சமூக ஒழுங்கு விதிகளுக்குள் வைத்துப் பார்க்கின்றது. இதனால் இவர்கள் குறித்து ஒற்றுமைப்பட்ட சிந்தனைத் தளம் ஒன்று இல்லாது போகின்றது.

சாதாரணமாக சமுதாயத்திலுள்ள விதவைகள் யார் என்றால் இலகுவில் அடையாளம் காட்டி விடலாம். ஆனால் அவர்கள் குறித்த வரையறையை அல்லது அவர்களுக்கான பொது இயல்புகளை அடையாளம் காண்பது என்பது அவ்வளவு இலகுவான காரியமாகாது.

ஏனெனில், தொடக்கத்தில் கணவனை இழந்தோர் விதவைகள் எனப்பட்டனர். பின்னர் சிந்தனைத் தளத்தில் மாற்றம் வர, கணவனை இழந்தோரும், கணவனைத் துறந்தோரும் விதவை என்னும் வட்டத்துக்குள் கொண்டு வரப்பட்டனர். ஆனால் இன்று இந்தச் சிந்தனையிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் ஏற்பட்டு கணவனை இழந்த அல்லது துறந்தவர்கள் மட்டுமன்று கணவனோடு இருந்து அவனோடு இணைந்து வாழ இயலுமையற்ற, தொடர்ந்து வாழ விருப்பமற்றோரும் விதவைகளாகக் கணிக்கப்படும் சிந்தனை ஊட்டல்கள் வலுப்பெற்று விட்டன.

## இலங்கையிலும் அதிகமானோர்...

உலகில் எந்தப் பாகத்தில் பார்த்தாலும் விதவைகளைக் காணலாம் என்பதில் உடன்பட்டுப் போவது போன்று, உலகில் எங்கெல்லாம் போர், மத, இன ரீதியான கலவரம், யுத்தம் இடம் பெற்றதோ? இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றதோ? அங்கெல்லாம் விதவைகளின் எண்ணிக்கை அதிகம் இருக்கின்றது என்பதிலும் உடன்பட வேண்டியுள்ளது.

இலங்கையைப் பொறுத்த வரையிலும் கூட இதே நிலைதான் மூன்று தசாப்த கால யுத்த அனுபவம் பெரும் தொகையான விதவையர்களைச் சமுதாயத்தில் உருவாக்கிக் கொடுத்திருக்கின்றது. யுத்த வெற்றி அல்லது தோல்வி என்கின்ற செயன் முறைக்குள் தங்களது கணவன்மார்களை மட்டுமல்ல, தங்களது எதிர்கால வாழ்க்கையையும் இழந்து நிற்கிறார்கள் ஒரு தொகைப் பெண்கள். இவர்களின் எண்ணிக்கை மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்டாலும் நாடு முழுவதிலும் இவ்வகையைச் சார்ந்தோரை அடையாளம் காண இயலும்.

சனத்தொகையின் விகிதாசாரத்தினையும் அனுபவங்களின் பிரதிபலிப்பினையும் பின்புலமாக வைத்து அவதானிக்கும் போது வட கிழக்கில் விதவைகளின் எண்ணிக்கை அதிகம் இருப்பதையும் அவர்கள் சமுதாய அளவில் படுகின்ற இன்னல்களும், தேவைப்பூர்திக்காய் படுகின்ற கஸ்ரங்களும் மிக அதிகமாக உள்ளன. அடிப்படைத் தேவைக்கான பூர்த்தி என்பதில் தொடங்கி பொது வாழ்க்கையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து போதல் வரைக்கும் இவர்களது வாழ்க்கைக் கோலம் உணர்வுகளைக் காயப்படுத்துவதாயும், எதிர்காலம் குறித்த அச்சத்தை ஏற்படுத்துவதாயும் இருக்கின்றது.

## குற்றச் செயல்களுடன்...

பொதுவாக எல்லா இடங்களிலும் விதவைகள் நிர்க்கதியாக்கப்பட்ட சூழலுக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களது வாழ்க்கை எதிர்பார்ப்பும், ஏமாற்றமும் நிறைந்ததாக மட்டுமல்லாது பாதுகாப்பு அற்றதாகவும் மாறியுள்ளது.

விதவைகள் குடும்பத்துக்கான பொருளாதார மூலதனமாக இருக்கும் கணவனை இழந்து விடுவதனால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர்.

தமது குடும்பத்தை நடாத்துவதற்கும், தமது பிள்ளைகளின் தேவையினைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவும் பொருளாதாரத்தைத் தேடும் வழியில் தங்களது சுயத்தை மட்டுமல்லாது தங்களுக்கென்றிருக்கும் ஒழுக்கக் கோவையையும் மறந்து விடுகிறார்கள். இதனால் சமூக விரோத, குற்றச் செயல்களைச் செய்யும் பிரிவினருக்குள் சேர்ந்து விடுகிறார்கள்.

வாழ்வியலில் ஒரு பகுதியாக இருக்கும் உணர்வு நிலை, பாலியல் ரீதியான ஆசைகளை முறையாகத் தீர்த்துக் கொள்ளும் வழிகளை இயல்பில் இழந்து விடுகின்றனர்.

மறுபுறம் மாற்று வழியில் அதனைத் தீர்த்துக் கொள்ள நினைக்கும் போது பல்வேறு சமூகப் பிரச்சினைகளைத் தூண்டக் கூடியவர்களாக மாறுபடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விகான சூழல்...

விதவைக் குடும்பங்களைப் பொறுத்தவரையில் அவ் விதவைப் பெண்ணுக்கு இரண்டு வகிபாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது. ஒரே நேரத்தில் அக் குடும்பத்தில் இருக்கும் குழந்தைகளுக்குத் தந்தையாகவும், தாயாகவும் இன்னும் அதிகப்படியாய் அக் குடும்பத்தில் முதியோர் இருந்தால் அவர்களுக்குப் பிள்ளையாயும் இருக்க வேண்டியுள்ளது.

இதனால் ஒரு குடும்பத்தாய் சாதாரணமாக அப்பிள்ளையின் மீது வைக்கும் கண்டிப்பையும், அக்கறையையும், உடனிருப்பையும் ஒரு விதவைத் தாயினால் செய்ய இயலுவதில்லை. குழந்தையின் கல்வி குறித்து அவளினால் முழுமையாகச் சிந்திக்க முடிவதில்லை. அதற்குப் பொருளாதாரம் இடம் கொடுப்பதுமில்லை.

48673

கற்றலுக்கான உபகரணம், அதற்கான சீருடைகள், இன்னும் பாடசாலைத் தேவைகள் என்று எத்தனையோ அம்சங்கள் பிள்ளைகளைச் சார்ந்திருக்க அவைகளைச் சுமையாகக் கருதும் நிலை அக் குடும்பத்தில் உருவாக்கப்படுகின்றது. குழந்தையின் கற்றலின் ஒரு பகுதியாக இருக்கின்ற கற்றலுக்கான சிறந்த வீட்டுச் சூழலை உருவாக்குவதிலும் தோற்று விடுகிறாள் விதவைத்தாய்.

பொது சன நூலகம்
மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்

## மாற்றுத் திட்டம் தேவையா?

உண்மையில் ஆராயும் போது இயல்பாயும் சமுதாய அளவிலும் விதவைகள் உடல், உள, சமுக, வாழ்வியல் சார்ந்து பல்வேறு சிக்கல் நிலைகளையும், குறைப் பூர்த்திச் சூழ் நிலைகளையும் கொண்டிருக்கிறார்கள் என்பது புலனாகின்றது. இவர்கள் உணர்வுகளோடு மட்டுமல்லாது உறவுகளோடும் போராடி, வெற்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்விகளை இனம் காணவியலாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு தனித்த வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் பின் தங்கியிருக்கும் விதவைகள் குறித்து யார் சிந்திப்பது? எப்போது? எவ்வாறு? என்ன முன்யோசனைகள்? எவ்வாறு அதை நடைமுறைப்படுத்துவது? அதன் பெறுபேற்றை எவ்வாறு பயனறுதியானதாக மாற்றுவது என்பது இன்னும் விடைகாண இயலாத கேள்வியாகவே உள்ளது.

உலக அளவில் இன்று யுத்தம், வன்முறை, கலவரங்கள் அதிகமாக இடம் பெறுவதினாலும் கலவரங்களை, யுத்தத்தினை விதவைகள் பின்புலமாகக் கொண்டிருப்பதினாலும், பொது உலகளாவிய சமூக நிறுவனங்களோ, தேசிய அரசுகளோ விதவைகள் குறித்துப் பூரண, பயனுள்ள திட்டங்களை வெற்றி கரமாகச் செய்து முடிக்க இயலாதுள்ளது.

## யார் சிந்திப்பது?

விதவைகள் உள அளவில் பாதிக்கப்படுகின்றார்கள். இவர்களது உள மருத்துவம் குறித்துச் சமூதாய நலனுள்ள உளவியல் சிந்தனையாளர்களது முன்யோசனைகள் தேவையாயுள்ளன.

விதவைகள் மத, கலாசார ரீதியாகப் புறக்கணிக்கப்படும் சூழல் உருவாக்கப்படுகிறது. அவர்களின் ஆன்மிக நம்பிக்கையை வலுப்படுத்தி அவர்களுக்கான புதிய ஒழுங்கு விதிகள் குறித்து மத விதப்புரையாளர்கள் முன்யோசனை தேவையாயுள்ளது.

விதவைக் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பின்னடைவில் உள்ளனர். இவர்களது பொருளாதார மீட்சி குறித்துப் பொருளாதார வல்லுனர்களது முன் யோசனை தேவையாயுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவைகள் சமுதாய அளவில் பாதுகாப்பற்றவர்களாக உள்ளனர். இவர்களுக்கான சமுதாயப் பாதுகாப்பு குறித்து சமூக ஆர்வலர்களது முன்யோசனைகள் தேவையாயுள்ளன.

உண்மையில் சிந்தித்துச் செயலாற்றச் சக்தியுள்ளோர் சிந்திக்கத் தவறினால் அவர்களது சீரழிந்த வாழ்க்கை இன்னும் சீரழிந்து கொண்டே போகும்.

இவ் வருடத்துக்கான சர்வதேச விதவைகள் தினம் வழமை போல் ஜீன் 23ந் திகதி நினைவூட்டப்படவுள்ளது. வழமைபோல் அன்றி இம் முறையேனும் நல்ல தீர்வுத் திட்டங்களோடும், முன் யோசனைகளோடும் அவை வரவேண்டும். குறைந்த பட்சம் விதவைக் குடும்பங்களின் அடிப்படைத் தேவைப் பூர்த்தி, குழந்தைகளின் கல்விக்கான உதவிச் செயற்றிட்டங்களை ஆசியாவிற்கேனும் முன்மொழிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன்-20 :

# சர்வதேச அகதிகள் தினம்

06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச அகதிகள் தினம்**

# அகதிகள் :

## முகாமில் கொண்டாடுவார்களோ?

உலக அளவில் சமூகங்களை ஆழுகின்ற அரசாங்கங்கள், சமூக சேவை செய்யும் நிறுவனங்கள் இன்னும் சமுதாய அக்கறை உள்ள அமைப்புக்களின் நடவடிக்கைகள் இன்று ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றன.

அவைகளால் தமது செயற்பாடுகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்க இயலாதுள்ளது. ஏனெனில் எவ்வாறு வறுமையான மக்களின் எண்ணிக்கை, வறுமைச் சூழல் அதிகரித்துப் போகின்றதோ? அதே போல் அகதிகளின் எண்ணிக்கை, அவர்களைப் பராமரிக்கும் பொதுத் தளம் என்பனவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகள் யார்...?

அகதிகள் யார் என்று அடையாளம் காட்டுவது இலகு ஆனால் அகதிகள் குறித்துச் பொதுவான வரையறை ஒன்றைச் சொல்வது கடினம்.

உலக அளவில் அகதிகள் என்றால் யார்? அவர்களுக்கான பொதுவான குணவியல்புகள் என்ன? என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. ஏனெனில் அகதிகள் உருவாக்கப்பட்டிருக்கும் சூழல், அதற்கான காரணங்கள் அவர்களின் எதிர்காலம் குறித்து உருவாக்கப்பட்டிருக்கும் செயற்திட்டங்கள் போன்றவை மாறுபாட்டையும், வேறுபாட்டையும் கொண்டுள்ளன.

ஏதோ ஒரு காரணத்தினால் தங்களது வாழ்வாதாரங்களையும், வாழ்க்கைக்கான ஜீவனோபாயத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்படுகிறவர்கள் அகதிகளாக அடையாளம் காணப்படுகின்றனர்.

காரணம் அனர்த்தம், யுத்த நடவடிக்கை, வறுமை, வரட்சிச் சூழல் என்று நீண்டு செல்லும். சில இடங்களில் அரசியல் காரணங்களுக்காகவும் பொதுமக்கள் சூழ்ச்சி செய்யப்பட்டு அகதிகள் ஆக்கப்படுகின்றனர்.

இன்று இருக்கும் அகதிகளினதும், அகதி முகாம்களினதும் வரலாற்றை அவதானிக்கும் போது அவர்கள் இந்நிலைக்கு வருவதற்கு அடிப்படைக் காரணமாக அரசியல் ரீதியான வியூகம், சர்வதேச ரீதியிலான ஆக்கிரமிப்பு நடவடிக்கை, உரிமைக்கான அரச எதிர்ப்புப் போராட்டம், ஆட்சி மாற்றத்திற்கான கிளர்ச்சி என்று அரசியல் ரீதியான காரணங்கள் செல்வாக்கு செலுத்தக் காணலாம்.

ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, ஆசியா என்று பொதுப்படையாகப் பார்த்தாலும் ஆசியாவில் இந்தியா, பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தனியாக ஆராய்ந்தாலும் அரசியல் காரணிகள் அகதிகளை உருவாக்கத் தூண்டுதலாக இருந்திருப்பதனைக் காணலாம்.

## உரிமை இழந்தவர்களா?

உலகின் எந்தப் பகுதியைப் பார்த்தாலும் அகதியாக்கப்பட்டவர்கள் என்றொரு பிரிவினர் இருந்து கொண்டே இருக்கின்றனர். அவர்களின் வாழ்க்கை முறையும், சமூகப் பங்கு பற்றுதலும் சாதாரண வாழ்க்கை வாழ்கின்றவர்களின் வாழ்க்கை முறையில் இருந்து வேறுபட்டு நிற்கின்றது.

சாதாரண மக்கள் அனுபவிக்கக் கூடிய உரிமைகள், சலுகைகள், வசதிகள் ஏன் சில நேரங்களில் தங்களது அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்து கொள்ள இயலாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

அகதிகள் பெறுமதியற்ற உயிர்களைப் போல் தொடக்கத்தில் ஆக்கப்படுகிறார்கள். அவர்களின் உயிர் வாழ்தலுக்கான உரிமையின் மீது ஒரு வகை மறைமுகத் தடை விழுவது போல் அது உணர்த்துகின்றது. பெரும்பாலான குடும்பங்கள் தங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரின் அல்லது பலரின் உயிரினை இழந்ததன் பின்னரே அதில் பீதியாகி இடம்பெயர்ந்து அகதிகளாக்கப் பட்டிருப்பதனையும் அடையாளம் காண இயலும்.

அகதிகளின் வாழ்விடம் பொதுவான தளமாகவும், வசதிகள் குறைந்த இடமாகவும் வரையறுக்கப்படுகின்றது. உறவினர்களது வீடாக இருந்தாலும், அகதி முகாம்களாக இருந்தாலும் அதைச் சொந்த இடமாக அன்றி பொதுத் தளமாகவே கருதுகின்றனர். இங்கு அகதிகளால் சாதாரண வாழ்க்கை வாழ முடிவதில்லை. கவலைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டுக்குள் வாழ வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதனால் அகதிகள் தங்களது சுயத்தை இழந்து விடுகின்றனர்.

அகதிகளால் தங்களது வாழ்வாதாரத் தேவையினைத் தங்களது சம்பாத்தியத்தின் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளப் பெரும்பாலும் இயலுவதில்லை. அவர்கள் தங்களது சொந்தத் தொழில் தளம் என்பவற்றை இழந்துதான் அகதிகளாகின்றனர். அதனால் அவர்கள் பொது அமைப்புக்கள், அரசாங்கத்தின் உதவிகள் மீது அதீத நம்பிக்கையும், எதிர்பார்ப்புங் கொண்டு சிறு வசதிகள் பெரும்பாலான தேவைகளை நிறைவு செய்யும் சமுதாய அலகாக மாறியுள்ளனர்.

அகதிகள் தாங்கள் விரும்பிய இடங்களுக்குச் சென்றுவர, தங்களது குடும்பத்தினரைச் சந்தித்து வரக் கூடிய வாய்ப்புக்கள் இல்லாதவர்களாக உள்ளனர். அகதிகளது வாழ்க்கைச் சூழல் வரையறுக்கப்பட்டு, வெளித் தொடர்பற்று ஒரு திறந்த சிறைச்சாலை போல் இருக்கின்றது. அவர்களால் தங்களது உள்ளத்து உணர்வுகளைக் கூட யாரிடமும் பகிர்ந்து கொள்ள இயலுவதில்லை.

அகதிகள் உள அளவில் பாதிக்கப்படுகின்றனர். அவர்களை இந்த நிலைக்கு உருவாக்கிய காரணங்களையும், தமது எதிர் காலத்தையும் எண்ணிப் பெரிதும் மன அளவில் பாதிக்கப்பட்டவர்களாகவும், உள நோய்களுக்குச் சொந்தக்காரர்களாகவும் மாறி வருவதனை அகதிகள் குறித்து மேற்கொள்ளப்படும் தேடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவ் ஆய்வுகள் அகதிகள் மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள் என்பதனை மட்டுமல்லாது அவர்களுக்கு மன அழுத்தம், மன நோய்க்கான நிவாரணமாக அவர்களது எண்ணிக்கை மாற்றி அமைக்கின்ற அல்லது ஆற்றுப்படுத்துகின்ற செயற்றிட்டத்தின் தேவையையும் உணர்த்தியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி எட்டாக்கனியாகிறதோ...

அகதிகள் எல்லாச் சொத்துக்களையும் இழக்கிறார்கள் கல்வியையும் சேர்த்து. அதனால் அவர்கள் எதிர்காலத்தையும் இழந்து விடுகின்றனர்.

அகதிகள் தமது வாழ்க்கைச் சூழலையும், வாழ்வாதாரத் தளத்தையும் விட்டு வெளியாகின்றனர். அல்லது விரட்டி அடிக்கப்படுகின்றனர். அதனால் அவர்கள் புதுச் சூழலில் வாழத் தொடங்குகின்றனர். அகதிக் குடும்பங்கள் எல்லாவற்றையும் இழந்து வருவதனால் முதலில் அவர்களது கவனம் குழந்தைக்கான அடிப்படை வசதி என்பதோடு நின்று விடுகின்றது. இதுவே அவர்களுக்குப் பெரும்பாடாக இருக்க பிள்ளைகளின் கல்வி, கற்றலுக்கான சூழல் குறித்துச் சிந்திக்க இயலாது உள்ளது.

அகதிக் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் தமது கற்றலுக்கான வாய்ப்பினை இழந்து விடுவது உண்மை. ஆனால் அந்த இழப்பின் வீதம் சில இடங்களில் உள்ள அகதிகளுக்கு அதிகமாகவும், சில இடங்களில் உள்ள அகதிகளுக்குக் குறைவாகவும் இருக்கும். ஆனால் கற்றலுக்கான வாய்ப்புக்கள் அகதி முகாம்களில் உருவாக்கப்பட்டாலும் அதற்கான சூழலோ, கற்றலுக்குத் தேவையான ஆரோக்கியமான மனோநிலையோ குழந்தைகளின் உள்ளங்களில் இருப்பதில்லை. இதனால் குழந்தைகளின் கற்றல் ஆர்வம் குறைந்து விடுகின்றது.

அகதி முகாம்களில் உள்ள மாணவர்களால் அவர்களது எதிர்காலக் கல்வி குறித்தோ இலட்சியங்கள் குறித்தோ எவ்வித திட்டங்களையும் செய்ய இயலாது உள்ளது. அவர்கள் தங்களது விடிவு எப்போது, தங்களுக்கு இப்போதைக்கான செலவுக்கான பொருளாதாரத்தை எவ்வாறு தேடுவது என்பதுடனே மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றது.

பொது சன நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி முகாம்களில் உள்ள குழந்தைகளின் உள்ளங்களில் நல்ல எண்ணங்களுக்குப் பதிலாக ஏமாற்ற உணர்வும் தங்களின் இந்த நிலைக்குக் காரணமானவர்களை பழிவாங்கும் எண்ணமும் அதிகரிக்கின்றது. அதனால் குற்றச் செயல்களும், சமூகவிரோதச் செயல்களும் அதிகரிக்கின்றது.

## எந்த முகாமில் கொண்டாடுவார்கள்?

உலக அளவில் வருடா வருடம் அகதிகள் தினம் நினைவூட்டப்படுகின்றது. இவ் வருடமும் ஜீன் 20ம் திகதி நினைவூட்டப்பட இருக்கின்றது. வருடா வருடம் இடம் பெறும் இந்த நினைவூட்டல் புதிய சொல்லாடலுடனும், புதிய செயற்றிட்ட அறிக்கைகளுடனும் இருக்கும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அகதிகளின் எண்ணிக்கையும், அகதிகளாக்கப்படும் சூழலின் எண்ணிக்கையும் அதிகரித்ததாக உள்ளன. அனர்த்தங்கள், இயற்கை அழிவுகளையும் பார்க்க அரசியல் ரீதியான முன்னெடுப்புக்கள், கிளர்ச்சிகளினால் உருவாக்கப்படும் அகதிகளுக்கான சூழலும், எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அதே போல் நாடுகள் பொருளாதார ரீதியாகச் சரிவினையும், தேக்கத்தினையும் சந்தித்து அகதிகளைப் பராமரிப்பதில் பெரும் சிக்கலை எதிர் நோக்கியுள்ளன.

இந்தப் பின்னணியில் நினைவூட்டப்பட இருக்கும் இவ்வருட அகதிகள் தினம் எந்த முகாமில் கொண்டாடப்படுமோ? அல்லது எந்த முகாமில் கொண்டாட்டத்தை ஏற்படுத்துமோ? தெரியவில்லை. ஒரு நாள் நிகழ்வுக்கான சுலோகங்களையும், செயற்திட்டங்களையும் சுமந்து வரும் போது அத்தினம் அன்றுடனே முடிந்து விடும். ஆனால் அகதிகளின் நிலை உணர்ந்து அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கும் விடிவுக்கும் நல்ல வாய்ப்புக்களை உருவாக்கும் முன்னறிவுப்புக்களை கொண்டு வருமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் அது எல்லா முகாமிலும் கொண்டாடப்படும் எல்லோர் உள்ளத்திலும் கொண்டாட்டத்தை ஏற்படுத்தும்.

உடறுதவும் பகுதி

## மாற்றுச் செயற்றிட்டம் தேவையா..?

நாம் ஒவ்வொருவரும் எமது குடும்பத்தில் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், இளைஞர்கள் குறித்து விசேடமாகக் கவனித்து அவர்களது வாழ்க்கை, பழக்கவழக்கம், எதிர்கால உருவாக்கம், வசதி வாய்ப்புக்கள் என்று எத்தனையோ விடயங்கள் பற்றிக் கவனம் எடுக்கின்றோம். அவற்றினைப் பெற்றுக் கொள்வதற்காக பெரும் முயற்சி செய்கின்றோம். எமது முழுச் சக்தியையும் அதற்காக பயன்படுத்துகின்றோம்.

பொதுப்படையாகப் பார்த்தால் அகதிகளாக் கப்படுபவர்கள் ஏதோ ஒரு வகையில் எமக்கு உறவுக்குரியவர்கள், எமது சமுகத்தைச் சார்ந்து நிர்க்கதியாக்கப்பட்டிருப்பவர்கள். இவர்கள் பெரும் வளத்துக்குரியவர்களாகவும், வளவாளர்களாகவும் இருந்தவர்கள் இருக்கத் தகுதியானவர்கள். காலச் சூழ்நிலை இவர்களது வாழ்க்கையைப் புரட்டி வைத்திருக்கின்றது.

இன்னொருவர் பற்றி அக்கறை கொள்ளத் தகுதியுள்ள செல்வமும், நல்ல உள்ளமும் படைத்தவர்கள் அகதிகளின் வாழ்க்கை, அவர்களுக்கான தேவைகள், அகதிக் குடும்பங்களில் உள்ள குழந்தைகளின் கல்வி, அவர்களுக்கான போதுமான வசதி குறித்துச் சிந்திக்க, அதற்கான உதவி செய்யக் கடமையுள்ளவர்கள் இனியேனும்... இது குறித்துச் சிந்திக்க வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம் குறித்து அக்கறையுடன் சிந்திக்கும் ஒவ்வாருவரும் புதிய கருத்தாக்கத்தையும், புதிய செயற்றிட்டங்களையும் வரையும் பணியைச் செப்பனிட வேண்டும். அதற்கான வளவாளர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைத்து சிந்தனைக் கண்ணோட்டத்தினை, கருத்தேற்றத்தினைச் செய்ய முன்வர வேண்டும். இப்போதிருந்தேனும்... இது குறித்துச் சிந்திக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாய் ஒரு சமுதாயத்தைத் தமது பலமாகக் கருதும் சமுதாயப் பிரதிநிதிகள் இது குறித்து புதிய சிந்தனைகளை உள்வாங்க வேண்டும். அகதிகளாக்கப்பட்ட வரலாற்றினை பிரேரிப்பதை விட்டு விட்டு அகதிகளுக்கான மறு வாழ்க்கைக்கான வேலைத்திட்டம் குறித்து ஆக்கபூர்வமான தீர்க்க யோசனைகளை முன்மொழிவு செய்ய வேண்டும். எப்படியேனும்... இது குறித்துச் சிந்திக்க வேண்டும்.

இவ்வருட அகதிகள் தினமேனும் இது குறித்து கருத்தேற்றம் செய்யும் சொல்லாடலையும், நல்ல திட்டங்களையும் அகதிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காய் முன் மொழியுமாயின் இவ்வருடமே அகதிகளின் வாழ்விற்கு சுதந்திரத்தைக் கொண்டுவர தொடக்கை உருவாக்கிய மகத்தான வருடமாகக் கணிக்கப்படும் பல அகதிகளின் உள்ளங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்-10 :

# சர்வதேச தற்கொலை தடுப்புத் தினம்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச தற்கொலை தடுப்புத் தினம்**

# தற்கொலை :

## தன்விருப்பமா? தண்டனையா?

இணை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

உலகில் மனிதன் தனது அறிவினைப் பயன்படுத்தி உருவாக்கிய அல்லது ஏற்படுத்திய அத்தனை அம்சங்களும் மனித குலத்திற்கு நன்மை பயக்கும் என்ற வாதம் தொடர்ச்சியாகவே இருந்து வந்தது

சமூக மாற்றமாக இருந்தாலும், புதிய கண்டுபிடிப்புக்காள இருந்தாலும், நவீன அறிவியல் சிந்தனைகளாக இருந்தாலும் அவை அனைத்தும் மனிதனின் நன்மைக்கே. அவை மனிதனை வீரியப்படுத்தி அவனின் இயலுமையை அதிகரிக்கச் செய்யும் ஒழுங்கமைப்பின் ஊடாகச் சரியாக வழிநடத்தும் என்று நம்பப்பட்டு வந்தது.

ஆனால் இந்த வாதம் மறுவாசிப்புக்குட்பட்டு விமர்சன ரீதியான சிந்தனைகளோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புபட்டு பொய்ப்பிக்கப்படத் தொடங்கி விட்டது. மனித அறிவின் உருவாக்கம் எல்லாம் நன்மை பயக்கும் என்ற வாதம் மாற்றமுற்று அறிவின் உருவாக்கம் மனித மனங்களைச் தோல்வியுறச் செய்திருக்கின்றது.

மனிதனை விரக்கியிலும், ஏமாற்றத்திலும் தள்ளி விடுகின்றது. இதன் தாக்கத்திலிருந்து அவனால் இலகுவில் மீண்டெழ இயலாதுள்ளது என்ற விவாதங்கள் இன்று கோட்பாட்டு நிலையை அடையத் தொடங்கியிருக்கின்றது. இதன் பிரதிபலிப்பாகவே தற்கொலை மற்றும் தற்கொலைத் தடுப்புத் தொடர்பான சொல்லாடல்கள் அறிவியல் உலகில் அதிக கவனத்துக்குரிய அம்சமாக மாறியிருக்கின்றது.

## தற்கொலை எனும் சொல்லாடல்...

இன்று உலக அளவில் தற்கொலை தொடர்பான சொல்லாடல் அதிகமாகப் பேசப்படுகின்ற, அதிகமாக ஆராயப்படுகின்ற ஒன்றாக மாறியிருக்கின்றது. ஏனெனில் தற்கொலையின் சதவீதம் எல்லாச் சமுதாயங்களிலும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இது குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் அறிவுலகிற்கு பல புதிய உண்மைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

உலக அளவில் தற்கொலை குறித்து ஆராய வேண்டியதன் அவசியம் 19ம் நூற்றாண்டில் இருந்து எழத்தொடங்கியது. சுமூகவியல், பொருளியல், உளவியல், கல்வியியல் சார்ந்து சமுதாயத்தை ஆராய்ந்த அறிஞர்களின் கவன ஈர்ப்புக்குரிய விடயமாக இது மாறியிருந்தது. 19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட அதி தீவிர சமூகமாற்றத்தின் விளைவிலும் நவீன உட்புகுத்தல்களின் விளைவினாலும் தற்கொலை அதிகரிப்பிற்கான சூழல் உருவாகியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலியல் பகுதி



தற்கொலை எனும் சொல்லாடலுக்கான உலக அளவிலான பொதுவான வரயறையை வரையறுத்துக் காட்டுவதென்பது இலகுவான காரியமாகாது. "ஒருவன் தனது உயிரைத் தமாகப் போக்கிக் கொள்ள அல்லது தனது உயிரைப் போக்கிக் கொள்வதற்கான ஏது நிலைகளை உருவாக்கி போகச் செய்ய அல்லது தன்னை அறியாது தாமாகவே தன் உயிரைப் போக்கிக் கொள்ள முயற்சித்து அதில் வெற்றி காண்பதனை தற்கொலை எனலாம்". இது தற்கொலை தொடர்பான விளக்கவுரையே அன்றி பொதுவான அல்லது முழுமையான வரையறை ஆகாது.

தற்கொலை குறித்த வரையறையில் இருப்பது போன்று அது உருவாகின்ற மூலம் அல்லது வகைப்பாடுகளிலும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஆனாலும் மூன்று வகைப்பட்ட நிலையில் தற்கொலை இடம் பெறுவதற்கான ஏதுநிலை உருவாவதாக அறிவியல் உலகம் எடுத்துக் காட்டுகின்றது.

முதலாவது தன்முனைப்பினால் நிகழும் தற்கொலை: இது தாமாக விரும்பி ஒருவர் தன் உயிரைப் போக்கிக் கொள்ளும் வகையைச் சார்ந்தது. இரண்டாவது சமூகத் தூண்டுதலினால் நிகழும் தற்கொலை: இது சமூக நெருக்குதல்கள், சிக்கல்களினால் ஒருவர் தன் உயிரைப் போக்கிக் கொள்ளும் வகையைச் சார்ந்தது. மூன்றாவது பித்து நிலைப்பட்ட நிலையில் நிகழும் தற்கொலை: இது சுயநினைவின்றி இருக்கும், புத்தி மயங்கிய நிலையில் இருக்கும் ஒருவர் தாமாகவே உயிரைப் போக்கிக் கொள்ளும் வகையைச் சார்ந்தது.

தற்கொலை எனும் சொல்லாடலை மிகச் சுருக்கமாக அவதானித்தால் "தனது விருப்பு வெறுப்புகளினாலோ அல்லது சமூக நெருக்குதல்களினாலோ உருவாக்கப்படும் சவால்களை எதிர்கொள்ளும் சக்தி தனக்கு இல்லையென்று ஒருவன் கருதும் சூழ்நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும் உயிர் இழப்பு தற்கொலையாகக் கருதப்படுகின்றது" என்ற உண்மையை உணரலாம்.

## சமூக நோய் போல...

சமுதாய அளவில் காலத்துக்குக் காலம் வேறுபாடும், மாறுபாடும் கொண்ட பல்வேறு சமூகச் சிக்கல்களும், சமூக நோய்களும் உருவாகும். இவை சமுதயத்துக்குச் சமுதாயம் வேறுபாட்டையும் ஒற்றுமையையும் காட்டலாம்.

தற்கொலையும் இவ்வகையைச் சார்ந்த ஒரு சமூக நோயாகவே அடையாளம் காணப்படுகின்றது. இது சமுதாயத்திற்குச் சொந்தமானதாக மட்டுமல்லாது எல்லாச் சமுதாய அலகுகளிலும் இருப்பதாக அதன் வளர்ச்சி வீதம் அதிகரித்துக் கொண்டே வருவதாகவும் அறிவுலகத் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஒரு சமூக நோயாக அடையாளம் காணப்படுகின்ற தற்கொலையினது தாக்கம் அல்லது அதீத இயக்கம் எச்சமுதாயத்தில் காணப்படுகின்றது என அவதானித்தால் அது மேற்குலகுதான் என்று தெளிவாகக் கூறிவிட இயலும். எந்தச் சமுதாயத்தில் அதீத அறிவியல் முன்னேற்றமும், நவீன கண்டுபிடிப்புக்களின் தாக்கமும் அதிகமாக உள்ளதோ அங்கெல்லாம் தற்கொலை செய்யும் நபர்களின் வீதமும் அதிகமானதாகக் காணப்படுகின்றது.

எங்கெல்லாம் தனிமனிதனின் ஆசையும், விருப்பமும் அதிகரிக்கப்பட்டு அதனை அடைவதற்கான வழிகள் இறுக்கி, மிகக் கடுமையாக்கி வைக்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் தற்கொலை நிகழும் சூழல் இயல்பாகவே உருவாக்கப்பட்டிருக்கின்றது. எங்கெல்லாம் மனிதன் தனது சுய ஆற்றலை இழந்து தெருவுக்குக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்படுகின்றானோ அங்கெல்லாம் தற்கொலை செய்வதற்கான பொதுத்தளம் உருவாக்கப்படுகின்றது.

தற்கொலை ஒரு சமூக நோயாக மாறுவதற்கான காரணம் என்ன என்று ஆராயும் போது முதலில் நிற்பது "நம்மிக்கையீனம்" பல்வேறு காரணங்களினால் மனித மனதில் எழும் நம்பிக்கையீனம் மற்றும் அவன் எதிர்கொள்ளும் அதீத விரக்தி, இயலாமை தற்கொலையைத் தூண்டும் முதற்காரணி எனலாம்.

இந்த நம்பிக்கையீனத்தை அல்லது இயலாமை உணர்வினை உருவாக்கப் பல காரணிகள் இருந்தாலும் அதில் முதலிடம் மனித மனதில் எழும் ஆசைகள் அல்லது எதிர்பார்ப்புக்கள் எனும் அம்சத்திற்குக் கொடுக்கப்படுகின்றது. கிழக்குலகின் சமுதாயங்களை விடவும் மேற்குலக சமுதாயங்களில் தற்கொலையின் வீதம் அதிகரிக்க இதுவே காரணமாகவும் ஆகிவிட்டது.

புதிய கண்டுபிடிப்புக்களும் நவீன வாழ்க்கை முறைக்கான சூழலும் ஒருவனது உள்ளத்தில் அதிக ஆசையையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துகின்றது. ஆனால் அதனை அடைந்து கொள்வதற்கான பொருளாதார மூலங்களைப் பெறுவது என்பதை அதிக சவாலுக்குரிய விடயமாக மாற்றியிருக்கின்றது. இதனால் தன்னால் இது இயலாது என உணர்கின்றவர்கள் அல்லது தான் இச்சமுதாயத்தில் இனியும் வாழ இயலுமையற்றவன் என்று உணர்கின்றவர்கள் தாமாக தம் உயிரைப் போக்கிக் கொள்ள முயற்சிக்கின்றனர். இதுவே தற்கொலையாக அடையாளம் காணப்படுகின்றது.

## உளவியல் அணுகுமுறையில்...

உலக சமுதாயங்களைத் தொடர்தேர்ச்சியாக அவதானித்த போது ஒரு உண்மை தெரிய வந்தது அதுதான் எல்லாச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்திலும் தற்கொலை செய்தவர்களின் வீதம் அதிகரித்துக் கொண்டு செல்வது.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு கேள்வியும் எழுகின்றது. 19ம் நூற்றாண்டில் இருந்து அறிவின் கவனத்தைத் தொட்டுவிட்ட தற்கொலை எனும் சமூக நோய் இன்னும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இதனைத் தடுப்பதற்கான எந்த முயற்சியும் இடம் பெறவில்லையா என்பது ஆனால் உலக அளவில் தற்கொலைத் தடுப்பிற்கான முயற்சிகள் இடம்பெறற்றுக் கொண்டே இருக்கின்றன. செயற்றிட்டங்களும், செயன்முறை ஒழுங்குகளும் செயற்பாட்டில்தான் இருக்கின்றன. ஆனாலும் வறுமை போல தற்கொலையின் வளர்ச்சி வீதமும் அதிகர்ததுக் கொண்டே இருக்கின்றது.

தற்கொலை சமூக நோயாக இருப்பதனால் அதனைத் தடுப்பது என்பது இலகுவான காரியமாகாது இப்போதெல்லாம் தற்கொலைத் தடுப்பு குறித்து சிந்திக்கப்படுகின்றதோ? செயல்முறைக்கான திட்டம் வகுக்கப்படுகின்றதோ அப்போதெல்லாம் சட்ட மற்றும் உளவியல் அறிவியல் துறைகளுக்கு இடையில் முரண்பாடும் எதிரிடையான போக்கும் இருந்து வருகின்றது.

தற்கொலைக்கான சூழலையும் தற்கொலை செய்யும் போது தற்கொலையாளி இருந்த நிலையையும் சட்டத்துறை ஒரு விதமாகவும் மருத்துவவத்தோடு இணைந்து கொண்டு உளவியல் துறை வேறுவிதமாகவும் அணுகும். ஒருவனின் தற்கொலை முயற்சி நிகழ்ந்தாலும் வேறுபட்டு நிற்கும் நிகழாவிட்டாலும் தண்டணை வழங்குவதில் வேறுபட்ட போக்கை பதிந்துரை செய்வதாகவும் இவ்விரு அறிவியல் துறைகளும் இருக்கக் காண இயலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுறவும் பகுதி

## சிந்தனை மாற்றம்....

தற்கொலை தொடர்பான செயன்முறையை ஒவ்வொரு அறிவியல் துறைகளும் வேறுபட்ட நோக்கில் அணுகுவதனால் தற்கொலைத் தடுப்புச் செய்வதற்கான சமூகப் பொறுப்பை எந்தத் தொடக்கால அறிவியல் துறைகளினாலும் சிந்தனைகளினாலும் (சட்டவியல், உளவியல், சமூகவியல், மானிடவியல்) செய்ய இயலாது என்ற நிலை உருவாகியிருக்கின்றது.

இந்த நிலையில் தற்கொலை சார் சொல்லாடலையும், தற்கொலைத் தடுப்பிற்கான முயற்சியையும் மாற்றுச் சிந்தனைத் தளத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. இந்தச் சமூகத் தற்கொலைசார் சொல்லாடல் குறித்து சிந்தனைக் கருத்துருவாக்கம் செய்யும் திறனும் சக்தியும் கல்வியியலுக்கு இருப்பதனை அடையாளம் காணவேண்டியுள்ளது.

எல்லாச் சமுதாயங்களிலும் கல்வியியல்சார் சிந்தனைக்கான சூழ் நிலைகள் அடி மட்டத்தில் இருந்து உருவாக்கப் பட்டிருக்கின்றன. ஒருவன் இள வயதிலிருந்து கல்வியியல் சார் சிந்தனைத் தளத்திற்குள் உள்வாங்கப்படுகின்றான்.

நல்லது - தீயது, சரி - பிழை, ஏற்புடையது - கடினமானது என்று எல்லாவற்றையும் இளவயதில் இருந்து கல்வியறிவின் ஊடாகக் கற்றுக் கொள்கிறான். கட்டுக்கோப்பாக கல்விச் சூழலுக்குள் இருந்து சமூக அனுபவங்களையும் பெற்றுக் கொள்கின்றான்.

இளவயதிலிருந்து அவனிடத்தில் தற்கொலை தொடர்பான சொல்லாடலை அறியச் செய்து அதன் நன்மை, தீமை குறித்து உணரச் செய்து அவனது உள்ளத்தை மிகச் சரியாகச் செப்பனிடப்படவுள்ளது. இதனைக் கல்வியில்சார் சிந்தனைகளால் மட்டுமே முழுமையாகச் செய்ய இயலும். இல்லையேல் இன்றிருப்பது போன்று தற்கொலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்பிற்கான சிந்தனைகளும், செயற்றிட்டங்களும் இருக்கும். ஆனால் மறுமுனையில் தற்கொலை அதிகரிப்பை ஆய்வுகள் எடுத்துக் காட்டும்.

கல்வியியலினால் தற்கொலைத் தடுப்பிற்கான சிந்தனைகளைச், செயற்றிட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த இயலுமா? அது சாத்தியமாகுமா? இது குறித்து யார் கவனம் கொள்வது? எவ்வாறு இதனைத் தொடங்குவது? போன்ற கேள்விகளைத் தொடர்புபடுத்தினால் ஏராளமான விடயங்களைத் தொடர்புபடுத்த வேண்டி வரும்.

கல்வியியலின் பரப்பு இன்னும் விரிவடைந்து அதற்குள் தற்கொலை தொடர்பான சொல்லாடல் அதிக கவனத்துக்குரிய பகுதியாகக் கொண்டு வரப்பட்டால் அது தொடர்பான ஆய்வுகள் மாறுபட்ட சமுதாய அளவுகளுக்குள் வேறுபட்ட வழிகளில் ஆராயப்பட்டு தற்கொலையின் இயல்புநிலை, சூழல் அதற்கான முயற்சிகள் குறித்து உண்மையான தரவுகள் பெறப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டால் இதன் முடிவுகளும், விளைவுகளும், எதிர்வு கூறல்களும் முறையாகப் பக்கச்சார்பின்றி வெளிப்படுத்தப்பட்டால் கல்வியியலினால் தற்கொலைத் தடுப்பிற்கான செயல் முறையைத் தொடங்க இயலும்.

தற்கொலை தொடர்பான சிந்தனையைப் பாடசாலைக் கல்விச் சுற்ற வரைபிற்குள் கொண்டு வந்தால் இது தொடர்பான உலகப் போக்கை ஆய்வின் முடிவுகளை விளைவின் எதிர்வு கூறல்களை பாடத்திட்டத்திற்குள் உட்புகுத்தினால் இன்னும் பிரத்தியேகச் செயன்முறைகளின் ஊடாக தற்கொலைக்கானதும், அதனைத் தடுப்பதற்குமான வழிமுறைகளை அடையாளம் காட்டி இளம் தலைமுறையினரிடம் புதிய சிந்தனைப் போக்கையும் சமூகப் பாதுகாப்பிற்கான வழிகளையும் தெரியப்படுத்தினால் கல்வியியலினால் தற்கொலைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்பிற்கான செயன்முறையை நம்பிக்கையோடு முன்னெடுக்க இயலும்.

மக்களின் சிந்தனையைத் தொடக்கக் கூடிய சமூக ஊடகங்கள் தற்கொலைக்கான ஏது நிலைகளையும், அதன் தடுப்பில் தனி நபரும் சமூகமும் கொள்ள வேண்டிய அக்கறையையும், பொதுமக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்கான வழிவகைகளையும், மாற்றுச் சிந்தனைகளையும், புதிய யுத்திகளையும் கையாளுவதற்றகான வழிகளைச் செய்வதற்கு கல்வியியலினால் உதவ இயலும் என்றிருந்தால் தற்கொலைத் தடுப்பிற்கான செயன்முறையைத் தொடர்ந்து முன்னெடுக்க இயலும்.

உலகம் பூராகவும் தற்கொலைகள் அதிகரித்திருக்கும் இச் சூழலில் இது குறித்து கல்வியியல் சிந்தனையாளர்களும், கல்வியியல் தளத்தில் நின்று இயங்கும் எழுத்தாளர்கள், வாசகர்கள், ஆய்வாளர்கள் என்று அடையாளம் காணப்படும் கல்வியியல் சமூகத்தவர்களும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

சர்வதேச ரீதியாகத் தற்கொலைத் தடுப்புத்தினம் நினைவூட்டப்படுகின்ற இத் தருணத்தில் இந்த எழுத்துக்களின் பிரதிபலிப்புக்கள் கல்வியியல் சிந்தனையாளர்களின் திட்ட வகுப்பாளர்களின், விளக்கவுரையாளர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும். அதன் பயனாக அடுத்து வரும் நாட்களில் அல்லாது அடுத்த தலைமுறையிலாவது தற்கொலைகளின் எண்ணிக்கை குறைய வேண்டும். இதற்காய் இந்த எழுத்துக்கள் தூண்டுதலாகத் தொடக்கத்தைத் தொடங்கி வைப்பதாக இருக்க வேண்டும்.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்-21 :

# சர்வதேச சமாதான தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமாதானம்

## தேவையுணர்வா? தேடுபெருளா?

செப்பரம்பர் 21 இல் சர்வதேச சமாதான தினம் சர்தேமெங்கும் வாழும் மக்களுக்கான சமாதானம், சகோரத்துவம், சமத்துவம் எனும் தொனிப் பொருளில் சர்வதேச சமூகத்தின் கவன ஈர்ப்புக்குரிய தினமாக இது பார்க்கப்படுகின்றது.

சர்வதேச, சமூக சமாதானத்துக்கான தேவை உணரப்படுகின்ற இச் சூழ்நிலையில் இத்தினத்தின் மூடு பொருள் என்னவென்பது விமர்சனத்துக்குரிய சொல்லாடலின் வழியாக தெளிவற்றும், குழப்பம் நிறைந்தும், வாதப் பிரதி வாதங்களோடு அறியப்படுவது ஆச்சரியமளிக்கின்றது.

சர்வதேசம் எங்கும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக மட்டுமல்லாது இன, மத, பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியில் சமாதானக் குலைப்புக்குரிய சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டு மனித குலத்தின் ஆண்மாக்களையும், உணர்வுகளையும், வருமானக் குறைப்பு, வன்முறை, இயலாமை, அநீதி இழைப்பு என்பன சீர்குலைந்திருக்கின்ற சூழ்நிலையில் "சர்வதேச சமாதானம்" எனும் சொல்லாடலை ஏந்தி இவ்வருடமும் ஒரு தினம் வருகின்றது.

## சமாதானம் என்பது ...

சமாதானம் எனும் சொல்லாடல் இதைத்தான் உணர்த்துகின்றது என வரையறுத்துக் கூற இயலாதுள்ளது. இச் சொல்லாடலுக்கான விளங்கிக் கொள்ளலும், விளக்கம் கொடுத்தலும் சூழ்நிலைக்கும், அறிவு நிலைக்கும் ஏற்ப வேறுபடுகின்றது. கொள்கைகளுக்கும், நோக்கங்களுக்கும் ஏற்ப மாறு படுகின்றது. தேவைக்கும், நலனுக்கும் ஏற்ப அளவையாக்கத்திற்கு மீள் உருவாக்கம் செய்யப்பட்டு உண்மைக்குள் பொய்யும், பொய்க்குள் உண்மையும் என்று மாற்றீடு செய்யப்படுகின்றது.

இவ்வாறான பின்புலன் இருக்க, இச் சொல்லாடலை வரையறுத்துப் பொதுமையாக்கல் செய்வதென்பது கடினமான செயலாகும். சமாதானம் என்பதை மனித மனங்களில், சமுதாயத்தில் வன்முறையற்ற அநீதி இழைக்கப்படாத சூழ்நிலை ஒன்றின் பிரதி விம்பமாகக் கருத இயலும். ஆனால் இவற்றில் பெரிய அளவிலான விமர்சனப் போக்கும், வேறுபட்ட சிந்தனைக்கான சூழலும் இருக்கின்றது.

சமாதானம் என்பது மனித உள்ளங்களுக்குள்ளும், மனிதர்களுக்குள்ளும் இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து தோற்றலாயிற்று. சமாதானம் என்பதை உரிமைகள் மற்றும் சலுகைகளோடு சேர்த்து அடையாளம் காணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை இன்று கருத்துரப் பெறலாயிற்று. வன்முறையற்ற சூழலில் சமாதானம் இருக்குமா? எனும் கேள்வியும் விமர்சனங்களோடு உருவாகத் தொடங்கலாயிற்று. ஆயுதக் கலாச்சாரத்தையும் அதில் அதிகரிப்பைச் செய்யும் சமூகம் மற்றும் நாடுகளினால் சமாதானத்துக்கான முன்னெடுப்புக்களை வெற்றிகரமாக்க இயலுமா? எனும் கேள்வியும் விடையற்றுப் போயிற்று.

உடன்பாதகவும் பகுதி

## இயல்பு நிலையும் தேவைப்பாடும்

சர்வதேச சமாதானத்தின் கருப்பொருள் மனிதர்களுக்குள்ளும், மனிதர்களுக்கிடையிலும் சமாதானத்துக்கான சூழ்நிலையை வேண்டி நிற்கின்றது. ஆனால் வறுமை, இயற்கை அழிவுகள், வன்முறைகள், அரசியல் நெருக்கடிகள், பொருளாதார வீழ்ச்சி, அமைதியின்மை, பேராசையும் ஆக்கிரமிப்பும் என்று தொடர்கின்ற பல காரணங்களினால் மனிதனுக்குள்ளும், மனிதர்களுக்கிடையிலும், சமுதாயங்களுக்கிடையிலும் எல்லாம் அமைதியற்றிருக்கின்றன. சமாதான இழப்புச் செய்யப்பட்டிருக்கின்றன.

நவீன உருவாக்கத்தின் பயனால் மனிதனது கலாச்சாரம் மட்டும் மாற்றம் காணவில்லை. நல்ல பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், உறவு நிலைகள் என்று எல்லாம் மாறிவிட்டன. அதிகரித்து வரும் தற்கொலையின் எண்ணிக்கை மனித உள்ளத்துக்குள் சமாதானமற்ற சூழலுக்கான இருப்பு அதிகரித்திருக்கின்றது என்பதனை உணர்த்தத் தொடங்கியிருக்கின்றது.

எல்லாச் சமுதாயங்களும் தமது சொந்த நலனுக்காக வன்முறையைப் பயன்படுத்தி அல்லது சமூக நிலையைச் சீர்குலையச் செய்து உருவாகின்ற சூழ்நிலைகளை வெற்றி கொள்கின்றதே தவிர சமாதானத்துக்கான சூழலை உருவாக்குவதாகத் தெரியவில்லை. நாடுகள் ஒவ்வொன்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நலனுக்கான வளத்திறன்களையும், கற்றுக் கொடுத்தலுக்கான ஊகங்களையும் வகுக்கின்றதே தவிர தமக்குள் சமாதான உறவுக்கான சூழ்நிலைகளை உருவாக்கச் செயலமர்வு செய்வதாகத் தெரியவில்லை.

சர்வதேசமெங்கும் சமாதானத்துக்கான சூழ்நிலை சீர்குலைந்து நிற்பதனால் சமாதான சூழலுக்கான அவசியம் தொடர்ந்து உணரப்பட்டுக் கொண்டே வருகின்றது.

ஒருவரின் அறிவு, ஒழுக்கப் பண்பு வளர்ச்சியாக இருந்தாலும் சரி, ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியாக இருந்தாலும் சரி, ஒரு சமுதாயத்தினது எதிர்காலம் குறித்த திட்டமிடலாக இருந்தாலும் சரி சமாதானச் சூழலுக்கான தேவை இன்றியமையாததாக உள்ளது என்பதனை அறிவுலகம் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றது.

## நினைவூட்டலா..? திட்டவரைவா..?

சர்வதேச சமாதான தினம் வருடா வருடம் நினைவூட்டலைத் தருகின்றது. மேற்குலகில் இந்த நினைவூட்டலின் தன்மை பரந்தளவிலானதாகவும் கிழக்குலகைப் பொறுத்தவரை அதன் தன்மை மிகக் குறைவாகவும் இருக்கின்றது. இதற்கு ஊடகங்களின் பங்கு மிகப் பெரியதாகக் கொள்ளப்படுகின்றது.

சர்தேசமெங்குமான சமாதானத்துக்கு இந்த நினைவூட்டல் மட்டும் போதுமா? என்று வினவினால் நிச்சயம் போதாது என்ற பதிலே கிடைக்கும். ஏனெனில் நினைவூட்டல் அன்றோடு மட்டும் நின்று விடும் ஆரோக்கியமான நலத்திட்டமே சர்வதேச சமாதானத்துக்கான சூழ்நிலைகளை உருவாக்கும் பணியினைத் தொடங்கும் என்று கருதுபவர்கள் பலர் உள்ளனர். இன்று சமாதானம் குறித்த சொல்லாடலும் அதற்கான செயற்றிட்டங்களும்

032317



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபட்ட மாற்றுச் சிந்தனையையும், வேறுபட்ட உள்நோக்கமும் கொண்டு கீழைத்தேய நாடுகளில் உள்ள சமுதாய அலகுகளை மெருக்குகின்ற அல்லது குலைப்புச் செய்கின்ற ஒன்றாக செயன்முறைப்படுத்தப்படுவதாக சமுக நோக்குள்ள கல்விச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் அச்சப்படுவதையும் குறித்துக் காட்ட வேண்டியுள்ளது.

ஆனாலும், இன்று ஏராளமான சமுதாய அலகுகளில் சமாதானம் நிறைந்த சூழலுக்கான தேவை உணரப்படுகின்றது. சமூக நோக்குக் கொண்ட உண்மையான சமாதானத்தையும், சகோதரத்துவ உணர்வையும் ஏற்படுத்தக் கூடிய செயற்றிட்டங்களுக்கான தேவைப்பாடும் அங்கிகாரமும் சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை இருந்து கொண்டே இருக்கின்றது.

## சிந்தனையைத் தொடுமா?

பாடசாலைக் கல்விக்கான திட்டவரைபாளர்கள் என்று தொடங்கி ஒரு நாட்டிற்கான சமூகப் பொருளாதார, வெளிநாட்டு உறவு நிலைக்கான திட்ட வரைவாளர்கள் வரை ஏராளமானவர்கள் கல்விச் சமூகத்திற்குள் இருக்கின்றனர். இவர்களின் கவனத்தை இவ்வருட "சர்வதேச சமாதானத்திற்கான சொல்லாடல் தொட வேண்டும்".

இவர்களின் சிந்தனையிலிருந்து சர்வதேசம் முழுவதுக்குமான வேறுபட்ட அணுகுமுறையுடன் கூடிய சமாதான முன்னெடுப்பிற்கான திட்டங்கள் அவசியப்படுகின்றன.

கல்வியியலாளர்களுக்கு... மனிதனின் ஆண்மா, எண்ணம், சிந்தனை போன்றன தூய்மை பெற, அமைதி பெற, சமாதானச் சூழலை உணர, உருவாக்க முறையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியல்சார் திட்டங்களை உருவாக்க வேண்டிய அவசியமுள்ளது.

கல்வியியலாளர்களுக்கு... போராட்ட, ஆயுத கலாச்சாரம் உச்சத்தையடைந்து வெற்றி தோல்விக்குப் பின்னரான சமுதாயத்தில் கடந்ததை மீட்டு சமூகத் தேக்கம் உருவாக்குவதைத் தவிர்த்து மறக்கச் செய்ய திட்டம் செய்து அதில் எதிர் கால சந்ததியினருக்கு நம்மிக்கை ஏற்படும் வண்ணம் திட்டம் உருவாக்க வேண்டிய அவசியமுள்ளது.

கல்வியியலாளருக்கு... புரட்சி ஆக்கிரமிப்புக்கள் நடந்த சமுதாயங்களில் அவர்களின் இயல்பு வாழ்க்கைக்கும் எதிர்காலம் குறித்த அச்சத்திற்கும் தீர்வு சொல்லும் வகையிலும் சமாதானச் சூழலைச் சமத்துவமாக உருவாக்கும் வகையிலும் திட்டங்களை உருவாக்க வேண்டிய அவசியமுள்ளது.

கல்வியிலாளர்களுக்கு... உள்நோக்கம், வேறுபட்ட இலாப நோக்கங்களைத் தூக்கிப் போட்டு விட்டு உலக மக்களின் சகோதரத்துவ உணர்வோடு சமாதானத்திற்கான பொதுத் தளத்தை உருவாக்குவதற்கு சகோரத்துவம், சமத்துவம், சமவுரிமை எனும் கருத்தாக்கங்களின் இருப்பை ஒவ்வொரு உள்ளங்களிலும், ஒவ்வொரு அரசுகளின் செயற்றிட்டங்களிலும் உள்ளீடு செய்வதற்கான சிந்தனை மாற்றத்தினைக் கொண்டு வரும் மீள் உழைப்பினைச் செய்ய வேண்டிய மிகப் பெரிய பொறுப்பும் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுதவும் பகுதி

ஒக்டோபர்-15ஆம்:

# சர்வதேச விழிப்புலனற்றோர் தினம்

௭



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச விழிப்புலனற்றோர் தினம்

# விழிப்புலனற்றோர் : வளவாளர்களாக்கப்பட வேண்டும்

உலகிலுள்ள உயிரினங்கள் படைக்கப்பட்டதா அல்லது பரிணாமம் பெற்றதா என்பது இன்றும் அறிவுலகின் விவாதத்திற்குரிய அம்சமாக இருந்து வருகின்றது. இதில் மனிதனது தோற்றம் வரலாற்றுக் கால கட்டம், வரலாற்றோடு பெற்றிருக்கும் முன்னேற்றம் என்பவையும் கேள்விகள் நிறைந்த அம்சங்களாக மாறியுள்ளன.

உலகிலுள்ள உயிரினங்களில் உயர்ந்த உருவாக்கம் மனிதர்கள் என்றால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லாது போகும். ஏனெனில் மனிதனது உடலியல் தோற்றம், நுண்ணறிவுத் திறன் மற்றும் பகுத்தறிவின் தத்துவம் என்பன உயிரினங்களின் உயர்ந்த உருவாக்கமாக மனிதனை வேறுபடுத்திக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களின் உருவாக்கம், தோற்றம் மற்றும் உணர்திறனில் வேறுபாடுகளைக் கொண்டிருப்பது போன்று அந்த உருவாக்கத்தின் பொதுத் தன்மையில் சில குறைபாடுகளும் செயலிழப்புக்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான தோற்றம் மற்றும் அறிதிறன் அறிவில் குறைபாடு உள்ளவர்களை அங்கவீனர்கள், இயலுமையற்றவர்கள், சாபக்கேடுகள், கடவுளின் தண்டனையைப் பெற்றவர்கள் என்றெல்லாம் கூறப்பட்டு வந்து இன்று மாற்றுத் திறனாளிகள் என்ற சொல் கொண்டு பிரத்தியேகமாக அழைக்கப்படக் காணலாம்.

## விழிப்புலனற்றோர் சமுதாயம்

உலக அளவில் அங்கவீனர்களாக யாரை இனங்காண்பது என்பது விமர்சனத்திற்குரிய அம்சமாக மாறியிருக்கின்றது. உடலியல் குறைபாடு உடையவர்களை மட்டுமா? அல்லது உணர்திறன், அறிதிறன் இயல்பில் குறைபாடு உள்ளவர்களையும் அங்கவீனர்களாகக் கருதுவதா என்பதும், அங்கவீனர்கள் என்று யாரையும் கருத இயலாது. அவ்வகையில் அடையாளம் காணப்படுபவர்கள் மாற்றுத் திறனாளிகள் அவர்கள் விசேட இயல்பு கொண்டவர்கள் அவர்களை ஒரு சமுதாயமாகக் கருதி மாற்றுத் திறனாளிகள் சமுதாயம் என்று அழைக்கப்பட வேண்டும் என்றும் வாதப்பிரதி வாதங்களோடு அதிகம் பேசுதற்குரிய அம்சமாக மாறியிருக்கின்றது.

உடலியல் தோற்றத்தில் (கண்ணில்) குறைபாட்டையும் விழியின் உணர்திறன் இயல்பில் குறைபாட்டையும் கொண்டவர்களை வழிப்புலனற்றவர்களாக அடையாளம் காண வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பிறப்பினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ (விபத்து, நோய்) தமது பார்வைக்கான சூழ்நிலைகளை இழந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பிறப்பினால் அல்லது பரம்பரை அலகுகளின் தொடர்ச்சியான இயல்புக் கடத்தலினால் தமது பார்வைக்கான அடிப்படையான அம்சங்களை இழந்து நிற்பதாகச் சர்வதேச ரீதியாகச் செய்யப்பட்ட ஆய்வுகளின் கணிப்புக்கள் சொல்கின்றன.

குறிப்பிட்ட ஒரு சமுதாயத்திலோ அல்லது நாட்டிலோ உள்ள ஒரு சிறு சமூகப்பிரிவாக இவர்களை அடையாளம் காண இயலாதுள்ளது. உலகெங்கும் பரந்து வாழ்கின்ற எல்லாச் சமூக அலகுகளிலும் இவர்களும் பரந்து வாழ்கின்றனர். இவர்கள் உலக அளவிலான சமூகமாக (விழிபுலன் அற்றோர் சமூகம்) அடையாளம் காணப்படக் கூடிய அளவிற்கு எண்ணிக்கையையும் தனித்துவமான இயல்புகளையும் கொண்டிருக்கின்றனர்.

## சமூக அக்கறையும் கல்வியும்

சமுதாய அளவில் அவதானிக்கின்ற போது விழிப்புலன் அற்றோரின் நிலை என்ன? வகிபாகம் மற்றும் விசேட ஏற்பாடுகள் என்ன? அவர்களுக்கான கல்வியின் அவசியம் என்ன? என்பது குறித்து ஏராளமான அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளன.

விழிப்புலனற்றோர் குடும்பத்திற்கு அல்லது சமூகத்திற்கு ஒருவகை சாபக்கேடாக அல்லது சுமையாக வந்தவர்களாகவே இது வரைக்கும் கணிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இவர்கள் வாழ இயலுமையற்றவர்களாகவே உணரப்பட்டு வந்திருக்கிறார்கள் ஆனால் இந்த நிலையில் இன்று மாற்றம் எழ ஆரம்பித்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் அடிப்படை வசதிகளையும் வாழ்க்கை மேம்பாட்டையும் ஏற்படுத்துவதற்கான சிந்தனை மற்றும் செயற்திட்ட ரீதியான முன்னெடுப்புக்கள் இன்று எல்லாச் சமூகங்களிலும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான உதவிகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வரக்காண இயலும்.

விழிப்புலனற்றோர் சமூகத்தில் கொண்டிருக்கும் வகிபாகம் என்பது குறுகிய வட்டத்திற்குள் வைத்துப் பார்க்கப்பட்டு வந்திருக்கின்றது. இவர்களும் உடலியல், உணர்வு வயப்பட்ட தேவையுள்ளவர்களாக உள்ளனர் என்பதும் இன்று மெல்ல மெல்ல அடையாளம் காணப்படத் தொடங்கியிருக்கின்றது. இவர்களுக்கான மாற்று ஏற்பாடுகள், விசேட திட்டங்கள், பொழுது போக்கு அம்சங்கள் குறித்துச் தேசிய மற்றும் சர்வதேசிய சமூகத்தின் சமூக ஆர்வலர்கள் கவனம் கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர்.

விழிப்புலனற்றோரை வளவாளர்களாக உருவாக்குவதிலும் அதன் வழியாக அவர்களின் திறமைகளைச் சமூகத்திற்குப் பயனுள்ள வழிகளில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்குவதிலும் இன்னும் கூடிய கவனத்தை எடுக்க வேண்டிய தேவையுள்ளது.

விழிப்புலனற்றோரை வளவாளர்களாக மாற்ற இயலுமென்றால் அது கல்வியினாலே இயலும். விழிப்புலன் அற்றோர் மத்தியில் கல்வியின் முக்கியத்துவம் குறித்து அதன் இயலுமை குறித்தும் உணர்த்த வேண்டி உள்ளது.

சமூக அக்கறையுள்ளவர்கள் இதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முன்நின்று உழைக்கவேண்டி உள்ளது. நவீன கல்வி முறைகளின் ஊடாக இவர்களின் கற்றலுக்கான ஆர்வத்தைத் தூண்டுவதற்கு கற்றோர் சமூகம் துணை நிற்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைக் கற்றுக் கொள்வதற்கும், கற்றுக் கொடுப்பதற்குமான கருவிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் விழிப்புலன் அற்றோர் குறித்து அக்கறையுடன் புதிய சாதனங்களை உருவாக்கியிருக்கின்றனர். இவர்கள் விசேடமாகப் பயன்படுத்தக் கூடிய தொலைபேசி, கணனி மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு ஏதுவான சூழல் என்பவைகளையும் உருவாக்கியிருக்கின்றார்கள். இதிலிருக்கும் அடிப்படைக் குறைபாடு என்னவென்றால் இச் சாதனங்கள் எல்லாம் சாதாரண விலையில் எல்லா இடங்களிலும் கிடைப்பதாக இல்லை. இது மட்டுமல்லாது இச்சாதனங்கள் தொடர்பான அறிவோ அல்லது இதனை இயக்குவதற்குத் தேவையான அறிவோ விழிப்புலன் அற்றோரிடம் இல்லாத நிலையுள்ளது. இதனால் இவ்வாறான நவீன சூழலை அவர்கள் நாட வழியறியாது அச்சத்துடன் இருக்கக் காணலாம்.

உடனுதவும் பகுதி

## மாற்றுத் திறனுள்ளவர்கள்

விழிப்புலன் அற்றோர் தொடர்பான ஆய்வுகள் எல்லாமே ஒரு உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. "விழிப்புலன் அற்றவர்கள் கண்ணில் அல்லது பார்வை ரீதியில் குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் ஏதோ ஒரு விடயத்தில் அல்லது அம்சத்தில் விசேட திறன் அல்லது இயலுமை கொண்டவர்களாக இருக்கின்றனர்" என்பதே அந்த உண்மை.

விழிப்புலன் அற்றவர்களில் பெரும்பாலானவர்கள் மிக நுண்ணியமாகக் கேட்கும் ஆற்றலும் நிறைந்த ஞாபக சக்தி கொண்டவர்களாகவும் இலகுவில் ஒருவருடைய குரலை இனங்கண்டு ஞாபகத்தில் வைக்கக் கூடியவர்களாகவும் இருப்பதனைக் காணுகின்றோம். இவர்கள் ஏதோ ஒரு துறையில் அல்லது நிகழ்வில் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்களை வெளிக்காட்டக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். கலை இலக்கிய அம்சங்களோடு அதிக நாட்டமும், அதிக திறன்களை வெளிக் காட்டும் ஆர்வமும் கொண்டவர்களாகவும் இருக்கக் காணலாம்.

தாம் பெற்றுக் கொள்ளும் குறைபாடுள்ள கல்விக்கூடாக நிறைந்த வெளியீடுகளையும் சிந்தனைத் திரட்டுக்களையும் ஆக்க முயற்சிகளையும் செய்யத் தொடங்கியிருப்பதனைக் காண இயலுகின்றது. இவர்கள் தமக்குள் இருக்கும் உளவியல் ரீதியான பாதிப்புக்களிலிருந்து விடுபடவும் சமூகத்திலிருக்கும் ஓரங்கட்டப்பட்ட நிலையில் இருந்து விடுபடவும் இன்று குரல் கொடுக்கத் தொடங்கியிருப்பது இன்னும் முன்னேற்றகரமான செயலாகவே கருத வேண்டியுள்ளது.

## வழி சமைப்போம்

இவ்வாறு உயர்ந்த மனிதப் பிறவியாகவும் சிறு குறைபாட்டுடனும் நிறைந்த மாற்றுத் திறனுடனும் வழிப்புலனற்றோருக்கான எமது பணி என்ன? அவர்களை எவ்வாறு அணுகுவது? என்பது குறித்துச் சிந்திக்க அறிவுலகம் கடமைப்படுகின்றது.

விழிப்புலன் அற்றோர் இயல்பிலேயே பார்வைக்கான இயல்புகள் இல்லாது இருப்பதனால் அவர்களின் வாழ்க்கைக்கு ஏதுவான சூழலையும் அடிப்படைத் தேவைப் பூர்த்திக்கான உதவிகளையும் செய்து கொடுக்க சமூக ஆர்வலர்களும், நிறுவனங்களும் இன்னும் சிரத்தை கொள்ள வேண்டியுள்ளது.

விழிப்புலன் அற்றோர் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு இருப்பதனால் அவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டுவதற்கும் சாதாரண வாழ்க்கை வாழும் மக்களுடன் ஏதுவான உளவியல், சமூகவியல் அணுகுமுறைகளுடனான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய செயற்றிட்டத்தின் தேவை உணரப்படுகின்றது. சமூகத் திட்ட வரைபாளர்கள் இது குறித்து இன்னும் சிரத்தை கொள்ள வேண்டியுள்ளது.

விழிப்புலன் அற்றோர் உடலியல், உணர்வு ரீதியான ஆசாபாசங்களுடன் இருப்பதனால் இவைகளைத் தீர்த்து வைப்பதற்கும் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்குமான சமூக மாற்றத்தின் தேவை உணரப்படுகின்றது. இது குறித்துச் சமூக மாற்றுச் சிந்தனையாளர்கள் அதிக சிரத்தை கொள்ள வேண்டியுள்ளது.

விழிப்புலன் அற்றோரின் கற்றலுக்கான விசேட சூழலையும் போதுமான வழிவகைகளையும் செய்ய வேண்டி இருக்கின்றது. விழிப்புலன் அற்றோரில் அதிகமானவர்கள் தமது கல்வியினை இடைநடுவில் விடுபவர்களாகவும் அல்லது பாடசாலைக் கல்வி என்பதையே அறியாதவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கான, உறுதியான, தன்னம்பிக்கை ஊட்டக் கூடிய நவீன வசதிகளைக் கொண்ட கல்விக்கான சூழல் ஒன்று உருவாக்கப்பட வேண்டியுள்ளது. இது குறித்து கல்வியியலாளர்கள் அதிக சிரத்தை கொள்ள வேண்டியுள்ளது.

விழிப்புலன் அற்றோர் இயல்பிலேயே மாற்றுத்திறன் கொண்டவர்களாக இருப்பதனால் அவர்களின் திறன்களை அடையாளம் கண்டு அதற்கு ஏதுவான வழிகளை உருவாக்கிக் கொடுத்து அவர்களை வளவாளர்களாக அல்லது சாதனையாளர்களாக மாற்றுவதற்குச் சமூகத்தில் உள்ள எல்லோரும் இன்னும் சிரத்தை கொள்ள வேண்டியுள்ளது.

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணைகள்


1. Audrey palm Riker, E. Holley, Brihbane, (1992), Married and Single life, Fifth edition, Vistaar publications.
2. Carole A. Beere. (1979), Women and women's issues, Jossey – Bass Publishers.
3. David A. Sousa. (2001), How the special needs brain learns, Corwin press, sage A publications company thousand oaks, California.
4. Elayathamby Manoharan. (2009), Educational psychology, E. manoharan.
5. Farah faizal, Swarna Rajagopalan. (2005), Women security south Asia a clearing in the thicket, SAGE publications.
6. Frank Scarpitti.R. (1997), Social Problem, The Dryden press advision of hold.
7. Gwyn kirk, Margo Okazawa – Rey. (2001), Women's lives – multicultural perspectives, second edition, Mc Graw – hill higher.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. J C Aggarwal. (1995, 2004), Teacher and education in a developing, fourth edition, Vikas publishing house PVT. LTD.
9. John Hawks. (1994), Youth Exchange: the complete guide to the home stay experience abroad, Fats on file an infobase holdings company.
10. John P. Isenberg, Mary Gloria Gerbracht. (1995), Teachers' Story, Jossey – Bass. Wiley Company.
11. Kenneth Cushner, Averil Mcclelland, Philip safford. (2000, 1996, 1992), Human Diversity in education an integrative approach, third edition.
12. Manuel Martinez – Pons. (2006), The continuum guide to successful teaching in higher education, New York London.
13. Nanalee Clayton. (1994, 1990), Youth living, Glencoe, Macmillan / MC Graw – hill.
14. Poul Danial , John Ivatts, (1998), Children and social policy, hound Mills publication.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. Robert L. Waltre. (1975), the teachers and collective bargaining, Professional educators publications.

16. Rae Andre. (2009), Organizational Behavior: An introduction to youth life in organization, Person education publication.

17. Vera p. John and Vivian M. Horner. (1971), Early Childhood Bilingual Education, Modern language Association of America.

18. Warren Umansky, Stephen. Hooper. Young Children with special needs, Third edition.

19. Wilma Robles de Melendez, Vesna Ostertag. (1997), Teaching young children in multicultural class room issue, concept, and strategies, Delmar publishers.

20. William E. Klingele. (1979), Teaching in middle schools, Allyn and bacon INC. Boston London Sydney Toronto.

21. Yasmine Tambaih.(2002), Women and imagining the state governance in south Asia, Unie Arts (PVT) Ltd Colombo- 13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஆறுமுகம். வ. (200), கல்விப் பாரம்பரியங்கள், உயர்கல்விச் சேவைப் பதிப்பகம் யாழ்ப்பாணம்.

23. கேசவன், கோ. சிவசேகரம், சி. வேணுகோபால், என். (2007), பின்நவீனத்துவ மாயைகளைக் கட்டவிழ்த்தல், தேசிய கலை இலக்கியப் பேரவை.

24. சந்திரசேகரன், சோ. (1995), புதிய நூற்றாண்டிற்கான கல்வி, தர்ஷணா பிரசுரம்.

25. ராம்தாஸ். வி. (2002), தமிழ் நாட்டில் பெண் கல்வி, மணிவாசகர் பதிப்பகம்.

26. முனைவர் கருணாநிதி. மா. (2008), கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடுப் பதிப்பம்.

27. திருச்சந்திரன். (1993), பெண்ணடிமையின் பரிமாணங்களும் பெண்ணுரிமையின் விளக்கமும், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன வெளியீடு.

48673



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்

உடற்கலைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-955-54181-2-6

ISBN 978-955-54181-2-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org